02 - 64
18-12-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*




# இந்த ஆண்டின் சிறந்த மனிதர் ஷக்கர் பெர்க்

facebook

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த ஆண்டின்...

உலகளவில் 2010 ஆம் ஆண்டின் சிறந்த மனிதராக பேஸ்புக் சமூக இணையத்தளத்தின் நிறுவுனர் மார்க் ஷக்கர்பெர்கை ரைம் பத்திரிகை தேர்வு செய்துள்ளது.

உலகளவில் இளைஞர்கள் அதிகம் பயன்படுத்தும் சமூக இணையத்தளமாக பேஸ்புக் விளங்குகிறது. 500 மில்லியன் மக்கள் பயன்படுத்தும் பேஸ்புக்கை ஆரம்பித்தது. அதை வெற்றிகரமான வர்த்தகமாகவும் மாற்றியுள்ளார் இவர். இன்று இணைய உலகின் ஜாம்பவான் கூகுளே அச்சம் கொள்ளுமளவுக்கு பேஸ்புக் வளர்ந்து வருகிறது.

26 வயதில் இந்தச் சாதனையைப் படைத்துள்ள முதல் இளைஞர் ஷக்கர்பெர்க் தான். இதற்கு முன் பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் இதே வயதில் ரைம் பத்திரிகையால் உலகின் சிறந்த மனிதராகத் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அவரை விட 2 வாரம் இளையவர் ஷக்கர் பெர்க்.

செய்தி மற்றும் கலாசாரத்தில் ஓர் ஆண்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களை ஆண்டுதோறும் ரைம் பத்திரிகை தேர்ந்தெடுத்து கௌரவித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆரம்பகால வாழ்க்கை

நியூயோர்க்கில் உள்ள வயிட் பிளைன்ஸில் ஷுக்கர்பெர்க் பிறந்தார். நியூயோர்க்கிலுள்ள டாப்ஸ் பெர்ரியில் வளர்ந்தார். அவர் நடுநிலைப் பள்ளியில் இருந்தபோதே நிரலாக்கம் செய்யத் தொடங்கினார். தொடக்கத்தில் ஷக்கர் பெர்க் கணினி நிரல்களை உருவாக்குவதில் மகிழ்ச்சி கொண்டிருந்தார். குறிப்பாக தகவல் தொடர்புக் கருவிகள் மற்றும் விளையாட்டுகள் நிரலாக்கங்களில் ஆர்வமாய் இருந்தார். பிலிப்ஸ் எக்ஸெட்டர் அகடமியில் சேர்வதற்கு முன்பு அர்ட்ஸ்லே உயர்நிலைப்பள்ளிக்கு மார்க் சென்று கொண்டிருந்தார். உயர்நிலைப் பள்ளியில் அவர் இலக்கியங்களில் சிறந்து விளங்கினார். அவர் பிலிப் எக்ஸ்டெர் அக்கடமிக்கு இடம்மாறிச் சென்றார். அங்கு வத்தினில் தன்னை முழுக்க ஆட்படுத்திக் கொண்டார்.

அவரது தந்தையின் அலுவலகத்தில் பணியாளர்களைத் தொடர்பு கொள்வதற்கு உதவியாக ஒரு நிரலையும் அவர் உருவாக்கினார். அவர் ரிஸ்க் என்ற விளையாட்டின் பதிப்பையும் உருவாக்கினார். மேலும், சினாப்சிஸ் என்ற இசை இயக்கியையும் உருவாக்கினார். பயனர்களின் கேட்கும் பழக்கங்களைக் கற்பதற்கு செயற்கை நுண்ணறிவில் இது பயன்படுத்தப்பட்டது. மைக்ரோசொ°ப்ட் மற்றும் ஏ.ஓ.எல். ஆகிய நிறுவனங்கள் சினாப்சிஸை வாங்கி ஷக்கர்பெர்கை பணியமர்த்த முயற்சித்தது. ஆனால், அவர் அதற்குப் பதிலாக ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு முடிவெடுத்தார். அங்கு அவர் ஆல்°பா எப்சிலிலோன் பீ என்ற அதன் துணைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். கல்லூரியில் த இல்லியாட் போன்ற வீரகாவியங்களில் இருந்து ஒப்புவிக்கும் வரிகளுக்காக அறியப்பட்டார்.

### பேஸ்புக்

பெப்ரவரி 4 ஆம் திகதி 2004 ஆம் ஆண்டு அன்று ஷக்கர் பெர்க் அவரது ஹவார்ட் ஓய்வறையில் இருந்து பேஸ்புக்கை நிறுவினார். பிலிப்ஸ் எக்ஸடெர் அகடமியில் அவரது நாட்களில் இருந்து பேஸ்புக்கின் யோசனை அவருக்கு உதித்துள்ளது. பெரும்பாலான கல்லூரிகள் மற்றும் தனியார் பள்ளிகள் போன்று அங்கும் அனைத்து மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை உடைய குழுப் புகைப்படங்களைக் கொண்டு ஆண்டு மலர் புத்தகத்தை வெளியிடும் நீண்டகால மரபுடைய வழக்கம் இருந்தது. அது பேஸ்புக் என அறியப்பட்டிருந்தது. கல்லூரியில் ஒருமுறை ஷக்கர்பெர்க்கின் பேஸ்புக்கானது ஹவார்ட் நினைவு என்ற போக்கிலேயே தொடங்கியது. பின்னர் ஷக்கர்பெர்க் பேஸ்புக்கை மற்றப் பள்ளிகளுக்குப் பரப்புவதற்கு முடிவெடுத்தார். இதை அவரது அறைத் தோழர் டஸ்டின் மோஸ்கோவிட்ச் உதவியுடன் செய்தும் முடித்தார். ஸ்ராா்போர்டு, டார்ட்மவுத், கொலம்பியா, கார்னெல் மற்றும் யால் ஆகிய பள்ளிகளில் முதலில் பேஸ்புக்கை அறிமுகப்படுத்தினார். மேலும், பின்னர் ஹவார்ட்டின் சமுதாய இணைப்புடன் மற்றப் பள்ளிகளுக்கும் அறிமுகப்படுத்தினார்.



### கலிபோர்னியாவுக்கு இடம்பெயர்தல்

மோஸச்கோவிட்ச் மற்றும் சில நண்பர்களுடன் ஷக்கர்பெர்க் கலிபோர்னியாவில் உள்ள பாலோ ஆல்டோவிற்கு இடம்பெயர்ந்தார். அங்கு அவர்கள் ஒரு சிறிய இல்லத்தை குத்தகைக்கு எடுத்து அவர்களது முதல் அலுவலகமாக மாற்றினர். அந்தக் கோடைகாலத்தில் அந்த நிறுவனத்திற்கு முதலீடு செய்த பீட்டர் தீலை ஷக்கர்பெர்க் சந்தித்தார். 2004 ஆம் ஆண்டு கோடைகாலத்தின் போது அவர்களுக்கு அவர்களது முதல் அலுவலகம் கிடைத்தது. ஷக்கர்பெர்க்கைப் பொறுத்தவரை இலையுதிர் காலத்தில் அந்தக் குழுவினர் ஹார்வெர்ட்டுக்குத் திரும்புவதற்கு முடிவெடுத்திருந்தனர். ஆனால், கடைசியாக அவர்கள் கலிபோர்னியாவிலேயே தங்கிவிட்டனர். அதன் பிறகு அவர் மாணவராகக் கல்லூரிக்குத் திரும்பவே இல்லை.

செப்டெம்பர் 5,2006 அன்று பேஸ்புக் நியூஸ் பீட் அறிமுகமானது. நியூஸ் பீட் என்பது வலைத்தளத்தில் உங்களது நண்பர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் காண்பிக்கும் ஒரு தயாரிப்பு ஆகும். நியூஸ் பீடை தேவையற்றதாக சிலர் (Weasel Words) பார்த்ததற்காகவும் சைபர்ஸ்டால்கிங்கிற்கான கருவிக்காகவும் ஷக்கர்பெர்க் விமர்சிக்கப்பட்டார்.

### பேஸ்புக் இயங்குதளம்

மே 24 2007 அன்று பேஸ்புக் இயங்குதளத்தை ஷக்கர் பெர்க் அறிவித்தார். இது பேஸ்புக்கினுள் ஒரு சமுதாயப் பயன்பாடுகளை உருவாக்குவதற்கு நிரலாளர்களுக்காக உருவாக்கப்பட்ட இயங்குதளம் ஆகும். இந்த அறிவிப்பானது உருவாக்குனர் சமூகத்தில் ஆர்வத்தீயை ஏற்படுத்தியது. ஒரு சில வாரங்களில் பல பயன்பாடுகள் உருவாக்கப்பட்டன. அதில் சிலவற்றை ஏற்கனவே, இலட்சக்கணக்கான பயனர்கள் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இன்று உலகம் முழுவதும் 8 இலட்சத்தைக் காட்டிலும் அதிகமான உருவாக்குனர்கள் பேஸ்புக் இயங்குதளத்திற்கான பயன்பாடுகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஜூலை 23 2008 அன்று பேஸ்புக் கனெக்டை ஷக்கர்பெர்க் அறிவித்தார். இது பயனர்களுக்கான பேஸ்புக் இயங்குதளத்தின் ஒரு பதிப்பாகும்.

நவம்பர் 6, 2007 அன்று லொஸ்ஏஞ்சலில் ஒரு நிகழ்ச்சியில் ஒரு புதிய சமுதாய விளம்பர அமைப்பை ஷக்கர்பெர்க் அறிவித்தார். இந்தப் புதிய நிரலின் ஒரு பகுதி பீகான் எனப்பட்டது. இது மக்களைப் பிற வலைத்தளங்களில் உலாவி நடவடிக்கைகளைச் சார்ந்து அவர்களது பேஸ்புக் நண்பர்களுக்கு தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்கு இடமளித்தது. எடுத்துக்காட்டாக ஈபே விற்பனையாளர் இருந்தது. இதன் மூலம் பேஸ்புக் நியூஸ் பீடின் வழியாக பயனர்களின் நண்பர்கள் பட்டியலிட்ட பொருட்களில் எதையெல்லாம் விற்றார்கள் என்பதை தானாகவே அறிய முடியும். இந்த நிரலானது இரண்டு இரகசிய குழுக்கள் மற்றும் தனிப்பட்ட பயனாளிகளுடன் இருந்து பலமான இரகசிய ஈடுபாடுகளுடன் வந்தது. ஷக்கர்பெர்க் மற்றும் பேஸ்புக்கால் இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவாகப் பதிலளிக்க முடியவில்லை. ஆனால், இறுதியாக டிசம்பர் 5, 2007 அன்று பேஸ்புக்கில் ஒரு வலைப்பதிவை ஷக்கர்பெர்க் எழுதினார். பிக்கானுடன் உள்ள பிரச்சினைகளுக்குப் பொறுப்பு எடுத்துக்கொண்டு பயனர்களுக்கு எளிதான வழியில் பொருத்தமாகவும் உள்ள சேவைகளை வழங்கவுள்ளதாக அதில் தெரிவித்திருந்தார்.

### கனெக்ட்யூ சச்சரவு

ஹவார்ட் மாணவர்களான கேமரான் வின்கில்வோஸ், டைலர் வின்கில்வோஸ் மற்றும் திவ்யா நரேந்திரா ஆகிய ஹார்வார்ட் மாணவர்கள் ஷக்கர்பெர்க் மீது குற்றஞ்சாட்டினர். அதாவது அவர்களுக்கு Harvard connection.com (பின்னர் கனெக்ட்யூ என்றழைக்கப்பட்டது) என்ற சமுதாய நெட்வெர்க்கை அமைப்பதற்கு உதவுவதாகக் கூறி ஷக்கர்பெர்க் அவர்களை ஏமாற்றிவிட்டதாக அவர்கள் கூறினர். 14, 2004ஆம் ஆண்டில் அவர்கள் வழக்குப் பதிவு செய்தனர். மார்ச் 28, 2007 அன்று இந்த வழக்கு பாரபட்சமின்றி இரத்துச் செய்யப்பட்டது. பின்னர் விரைவில் போஸ்டனில் உள்ள அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீண்டும் பதிவு செய்யப்பட்டது. ஜூலை 25 2007 அன்று அவ்வழக்கின் பூர்வாங்கமான கேட்டறிதலானது திட்டமிடப்பட்டது. அவர்களது புகாரின் ஒரு பகுதிகளான கனெக்ட்யூ தெளிவாக அறிவிக்கப்படவில்லையென்றும் திருத்தப்பட்ட புகாரை மீண்டும் பதிவு செய்யும் திறமையை அவர்களுக்கு வழங்குவதாகவும் அந்தக் கேட்டறிதலில் நீதிபதி கூறினார். ஜூன் 25 2008 அன்று இந்த வழக்கு முடிவுற்றது. மேலும், பேஸ்புக் அவர்களுக்கு முடிவாக 65 மில்லியன் டொலர் கொடுப்பதற்கு ஏற்றுக்கொண்டது.

இந்த வழக்கின் ஒரு பகுதியாக 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஹவார்ட் முன்னால் மாணவர்கள் பத்திரிகை 02138 இன் வலைத்தளத்தில் இரகசிய நீதிமன்ற ஆவணங்கள் வெளியிடப்பட்டன. அவர்கள் அதில் ஷக்கர்பெர்க்கின் சோசியல் செக்யூரிட்டி எண்,அவரது பெற்றோர்களின் வீட்டு முகவரி, அவரது பெண் நண்பியின் முகவரி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தனர். பேஸ்புக் அந்த ஆவணங்களை வெளியே எடுக்கும்படி வழக்குப் பதிவு செய்தது. ஆனால், நீதிபதி 02138க்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கினார்.

### பேஸ்புக்கில் மைக்ரோசொப்டின் முதலீடு

அக்டோபர் 24 2007 அன்று பேஸ்புக் இன்க். 1.6 வீத பங்கை மைக்ரோசொப்ட் கார்பரேசனுக்கு 240 மில்லியன் டொலர்களுக்கு விற்றது. மேலும் ஒன்லைன் தேடுதல் முனைவரான கூகுள் இன்க்கிடம் இருந்து போட்டிக் கோரிக்கையை நிராகரித்தது. இதன் மூலம் அந்தச் சமயத்தில் 15 பில்லியன் சந்தை மதிப்பை பேஸ்புக் கொண்டிருப்பது தெரியவந்தது. மைக்ரோசொப்டின் எக்ஸ்பாக்ஸ் 360 விளையாட்டுகள் கன்சோலின் ஒரு மென்பொருள் புதுப்பித்தலின் வெளியீட்டில் பேஸ்புக்,ருவிட்டர் மற்றும் லாஸ்ட் எ°பெம்மின் ஆதரவு இருந்தது.

### 2009 இல் பேஸ்புக்

டிசம்பர் 2 2009 அன்று பேஸ்புக்கில் 350 மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த அமைச்சர்களின் ‘முன்னுதாரணம்’

இளையவர்களுக்கு மூத்தவர்களும் புதியவர்களுக்கு பழையவர்களும் முன்னுதாரணமாகத் திகழ வேண்டியது அவசியம். இது எத்துறையின்றி சகல துறைக்கும் பொருந்தும். ஆனால், நாட்டின் உயரிய சபையான பாராளுமன்றத்தில் இந்த முன்னுதாரணம் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்று பார்த்தால் அவ்வாறானதொரு நிலை இங்கு அறவே இல்லையென்று துணிந்து கூற முடியும்.

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் ஊடாக ஏராளமான புதிய முகங்களும் இன இரத்தங்களும் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகி வந்துள்ளனர். அதிலும் அரசதரப்பிலேயே அதிகளவான இளவயதினர் எம்.பி.க்களாக உள்ளனர். இவர்கள் பாராளுமன்றத்தில் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்தால் ஒரு பாடசாலையிலோ அல்லது பல்கலைக்கழகத்திலோ மாணவர்கள் செய்யும் செயல்களைப்போலவே இருக்கும்.

எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பேசும்போது குழப்புவது,குறுக்கீடுகளைச் செய்வது, ‘கூ’ அடிப்பது, மேசைகளில் தட்டுவது என இவர்கள் மாணவர்களைப் போலவே நடந்து கொள்கின்றனர். பலருக்குப் பாராளுமன்றத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறை,நிலையியற் கட்டளைகள் கூட அறவே தெரியாதிருப்பதுதான் மிகவும் வேதனைக்குரிய விடயம். இவர்கள் அதனை அறிந்து கொள்வதிலும் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை.

சில வேளைகளில் அனைத்துத் தரப்பினராலும் மரியாதையாக நோக்கப்படும் மூத்த அரசியல்வாதிகள் பேசும்போது கூட இவர்கள் நடந்துகொள்ளும் முறையைப் பார்க்கும் போது அருவருப்பே ஏற்படும்.மிகவும் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களையும் அவமதிக்கக்கூடிய நடத்தைகளையும் மூத்த அரசியல்வாதிகளுக்கு எதிராக இவர்கள் மேற்கொள்வார்கள். இதனை ஒரு சாதனையாக, விளையாட்டாக இதுதான் சரியான முறை என்பதுபோலவே இவர்கள் நினைக்கின்றனர்.

இதிலும் கவலைக்குரிய விடயம் என்னவெனில் மூத்த அரசியல்வாதிகளின் புதல்வர்கள்கூடத் தமது தந்தைமாரின் கௌரவத்தை அவர்கள் கட்டிக்காத்த அரசியல் பண்பை காப்பாற்றத் தவறுவதுதான். தந்தை கௌரவமான அரசியல்வாதியாக உள்ள நிலையில் மகனோ ஒரு அடாவடித்தன, பண்புகளற்ற, மூத்த அரசியல்வாதிகளை மதிக்கத் தெரியாததொரு அரசியல்வாதியாகவே காணப்படுகின்றார்.

இந்த இளம் எம்.பி.க்களின் இவ்வாறான தவறான போக்குகளுக்கு காரணமாக முன்னுதாரணமாக மூத்த அரசியல்வாதிகள் சிலரும் இருப்பதை மறைப்பதற்கில்லை. அவர்கள் பாராளுமன்றத்தில் நடந்துகொள்ளும் முறை,செய்யும் அட்டகாசங்களையே இந்த இளம் எம்.பி.க்களும் பின்பற்றுகின்றனர். முத்தவர்கள் செய்வதைப்போல் தாமும் செய்தால் தான் அரசியலில் தொடர்ந்து நிலைக்க முடியுமென இந்த இளம் எம்.பி.க்கள் நினைக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையை கடந்த வரவு-செலவுத் திட்ட விவாதங்களில் நன்றாக அவதானிக்க முடிந்தது. மூத்த அமைச்சர்கள் சிலரே மிகவும் மோசமாக,நாகரீகமற்ற வகையில் இந்த விவாத அமர்வுகளில் [illegible]னர். மூத்த அமைச்சர்களே அவ்வாறு நடக்கும்போது அவர்களைப் பின்பற்றும் இளம் எம்.பி.க்கள் என்ன செய்வார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல.

அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர்களுக்கு முந்தநாள் பெய்த மழையில் நேற்று முளைத்த காளான்களைப் போல் இருக்கும் இந்த இளம் எம்.பி.க்கள் அரசியல் கற்றுக்கொடுக்க முனைவதுதான் வேடிக்கையும் வேதனையானதுமான விடயம். எதிர்த்தரப்பு ஏதாவது பேசினால் அதனை எதிர்க்க வேண்டும். குழப்ப வேண்டும் என்பதே இவர்களின் கொள்கையாகவுள்ளது. அதுதான் தமது கடமையென இவர்கள் நினைக்கின்றனர்.

ஆனாலும் அனைத்து இளம் எம்.பி.க்.களையும் இந்தப் பட்டியலில் இணைத்துவிட முடியாது. இதற்கு உதாரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட இளம் எம்.பி.யான ஹரீன் பெர்னாண்டோ சில மூத்த அமைச்சர்களுக்கு தனது உரையின் மூலம் சாட்டையடி கொடுத்தார். அவர் துணிச்சலாக மூத்த அமைச்சர்களுக்கு எதிராக தனது கருத்தைக் கண்டனத்தைத் தெரிவித்த போது அதற்கு எதிராக ஒரு அமைச்சர் கூட வாய்திறக்கவில்லை.

நாங்கள் உங்களைப் பார்த்து வளர்ந்[illegible]வர்கள். அரசியல்வாதியானவர்கள். எமக்கு நீங்களதான் வழிகாட்டி. முன்னுதாரணம். ஆனால்,மூத்த அமைச்சர்களான நீங்கள் இந்த உயரிய சபையிலே நடந்து கொள்ளும் அநாகரிகமான முறையைப் பார்க்கும்போது வேதனையேற்படுகின்றது. நாங்களும் அரசியல் சாக்கடைக்குள் விழுந்து விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. எமக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய நீங்கள் இப்படி நடந்து கொள்ளலாமா?

அரசியலைத் தற்போது கற்கத் தொடங்கியுள்ள எமக்கு நீங்கள் கற்றுத் தரும் பாடம் இதுதானா? இளம் எம்.பி.க்களான எங்களுக்கு நீங்கள் காட்டும் அரசியல் பாதை இந்த அநாகரிகமான முறைகள் தானா? எமக்கு நீங்கள் வழிகாட்டாது விட்டாலும் பரவாயில்லை. எம்மை ஒரு கீழ்த்தரமான அரசியல்வாதியின் நிலைக்குக் கொண்டு வரக் கூடிய முன்னுதாரணமாக இருந்துவிடாதீர்கள். இது இளம் எம்.பி.க்கள் சார்பாக நான் உங்களிடம் விடுக்கும் வேண்டுகோள்.



ஹரீன் பெர்னாண்டோ எம்.பி.யின் இந்தச் சாட்டையடிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூட எந்த மூத்த உறுப்பினர்களுக்கு தைரியம் வராதபோதும் வழக்கம் போலவே அரசதரப்பின் இளம் எம்.பி.க்கள் தான் தமது வாடிக்கையான குழப்பம் விளைவித்தல், இடையூறு செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டனர். ஹரின் பெர்னாண்டோவின் உரையைக் குழப்புவதில் அவர்கள் திருப்தி கண்டனர்.

வெளியே தூய்மையானவர்களாக,உத்தமர்களாக,அமைதியின் சின்னங்களாக,பொறுமையின் பொக்கிஷங்களாக வலம் வரும் பல அரசியல்வாதிகள் உண்மையில் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பதை பாராளுமன்றம் வந்தால் மட்டுமே தெரிந்துகொள்ள முடியும்.

**பா.கிருபாகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காலநிலை மாற்றங்களும் கான்கன் மாநாடும்'

பூமியில் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களினதும் நிலைத்திருப்பிற்கு 'இயற்கையை மாறாது பேணுதல்' அவசியமாகும். 'இயற்கையிலிருந்து பிறழ்தல் மகிழ்ச்சியிலிருந்து பிறழ்தலுக்கு' ஒப்பானதாகும்.அந்த வகையில் இன்று நாம் அனைவரும் எதிர்நோக்கும் முக்கிய சவாலாக இருப்பது சூழல் மாசடைதலும் அதனுடன் தொடர்புடையதான காலநிலை மாற்றங்களுமேயாகும்.

அண்மைக்காலமாக காலநிலையின் மாறுபட்டதன்மைகளை நாம் உணர்கின்றோம்.அதிகரித்துவரும் வெப்பநிலை, வெள்ளப்பெருக்கு, வறட்சி,என்றுமில்லாதவாறான பனிப்பொழிவு என காலநிலை மாற்றங்கள் தமது மாறுபட்ட தன்மையைக் காட்டிவருகின்றன.இதனால் தான் ஐக்கியநாடுகள் அமையத்தின் பன்னாட்டு விஞ்ஞானிகள் குழுவானது காலநிலை மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டு எச்சரிக்கையுடன் கூடியதொரு விடயத்தினைத் தெரிவித்திருந்தது.

அதாவது காலநிலை மாற்றம் காரணமாக இனிவருங்காலங்களில் இயற்கையின் சீற்றங்கள் அதிகரிக்கலாம் என்பதே அந்த எச்சரிக்கையாகும்.மனிதன் இயற்கையை கருத்திற் கொள்ளாது அதனுடன்

இணைந்து வாழ்வதனைத் தவிர்த்து தன்னிச்சையாக வாழ முற்பட்டதன் விளைவாகவே இன்று நாம் எதிர்நோக்கும் இயற்கையின் சீற்றங்கள் காணப்படுகின்றன.

எனவே உலகளாவிய ரீதியில் சூழல் சமநிலையைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளை தவிர்ப்பதற்கும், நிலைத்திருக்கும் சூழல் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் பொருட்டு பல்வேறு சூழல் சார் மாநாடுகள் வருகின்றன. அந்தவகையில் அண்மையில் இடம்பெற்ற கான்கனில் இடம்பெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு எத்தகையதோர் பங்களிப்பினை நல்கும் வகையில் அமைந்திருக்கிறது என்பது பற்றிய ஆராய்ச்சி அவசியமானதாகும்.

18 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டபோது மனித சமூகம் அறிவியலின் விளிம்பைத் தொட்டுவிட்டதாக கொண்டாடியது பிற்காலத்தின் சகல தொழிநுட்ப வளர்ச்சிக்கும் இக் கைத்தொழில் புரட்சியே மூலமாக அமைந்த அதேவேளை புவிச்சுழலில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றமையை நாம் மறுக்க முடியாது.அதாவது அபிவிருத்தி எனும் போர்வையில் காடழித்தல்,வளச்சுரண்டல்,நகரமயமாக்கம் என்பன அதிகரித்தன.இதனால் சூழலில் தேவையற்ற கழிவுகள் சேர்ந்ததுடன்.புவி வெப்பநிலை மற்றும் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்துவருகின்றது.

புவி வெப்பமடைதலில் பச்சைவீட்டு வாயுக்களான காபனீரொட்சைட்டு(இஒ2) மெதன்,நைதரசன் சேர் வாயுக்கள் என்பன அதிகளவான பங்களிப்பினை நல்குகின்றன. அதாவது இவை சூரியக்கதிர்கள் புவிமேற்பரப்பில் பட்டு மீளத் தெறிப்படைந்து செல்வதனை தடுக்கின்றன. எனவே புவி வெப்பமடைகின்றது.

பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் காடழிப்பதனைத் தவிர்க்க வேண்டும். காடுகள் இயற்கையாகவே காபனீரொட்சைட் வாயுக்களைக் கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டவை.ஆனால் அதிகரித்து வரும் சனத்தொகையின் தேவைக்கேற்ப விவசாயம்,கைத்தொழிலாக்கம் ,நகரமயமாக்கல் மற்றும் குடியிருப்புத் தேவைகள் என்பவற்றுக்காக காடுகள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றன.

ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்பு வளிமண்டலத்தில் இருந்த காபனீரொட்சைட் வாயுவின் அளவு 275 ppm(Parts per million) ஆகும்.ஆனால் தற்போது அது 392 ணீணீட் ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் சூரிய ஒளியிலுள்ள ஆபத்து மிக்க அகப்,புற,சிவப்பு மற்றும் ஊதாக்கதிர்கள் புவியை வந்தடைவதை தடுக்கும் வகையில் புவிக்கோளத்தைச் சூழ அதாவது வளிமண்டலத்தின் ஒரு பகுதியாக ஓசோன் எனும் மெல்லிய படை காணப்படுகின்றது.

வளிமண்டலத்தில் படைமண்டலத்தில் காணப்படும் ஓசோன் படையானது சூரியனிலிருந்து வரும் ஆபத்தான கதிர்களிலிருந்து பூமியைக் காப்பாற்றுகிறது.ஆனால் குளோரோ புளோரோ காபன் (CFC) வாயுவின் வெளியேற்றத்தினாலும்,ஏனைய சில நைதரசன் சேர் வாயுக்களின் வெளியேற்றத்தினாலும் ஓசோன் படையில் தூவாரம் ஏற்பட்டுள்ளதனால் புவியை வந்தடையும் புற ஊதாக் கதிர்களின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் புவி வெப்பமடையும் அளவு அதிகரித்து வருகின்றது.

புவி வெப்பமடைதலானது பல்வேறு விளைவுகளை உருவாக்கி உலகளாவிய காலநிலை மாற்றத்திற்கும், இயற்கைச் சீற்றங்களின் அதிகரிப்புக்




கும் வழிவகுத்துள்ளமையை எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. அத்துடன் உலகின் அதி வெப்ப ஆண்டாக 2010 ஆம் ஆண்டு இருக்கிறது என உலக வானிலை மையம் தெரிவித்துள்ளது. 1990 களின் பின்னர் உலக வெப்பநிலை 0.46 பாகை செல்சியஸ் அதிகமாகப்பதிவாகியுள்ளது.

புவி வெப்பமடைதல் அதிகரித்துள்ள நிலையில் பல்வேறு நாடுகளிலும் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றத்தினை அவதானித்த அரசுகள் ஐ.நா. அமையத்தினை நடுநிலையாகக் கொண்டு சூழல் சமநிலையை பேணுவது தொடர்பான சரியான தீர்மானத்தினை ஏற்படுத்த முனைந்துள்ளன.

அந்தவகையில் இவ்வருடம் நவம்பர் 25 ஆம் திகதி முதல் இம்மாதம் 10 ஆம் திகதி வரை உலகக்காலநிலை மாற்ற மாநாடானது மெக்ஸிகோவின் கான்கன் நகரில் இடம்பெற்றது. அதில் புவி வெப்பமடைதலைத் தவிர்க்கும் வகையிலான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதன் ஆரம்பமாக 1992 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகளின் புவி உச்சி மாநாடு பிரஸிலின் றியோடீ-ஜெனிரோ நகரில் நடத்தப்பட்டது.அதன்போது UNFCCC (United Nations Framework Convention Climate Change) எனப்படும் காலநிலை மாற்றத்துக்கான ஐக்கிய நாடுகளின் செயற்றிட்டபேரவை உருவாக்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து வருடாவருடம் காநிலை மாற்ற மாநாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அந்தவகையில் தான் 1997 இல் ஜபானின் கியோட்டா நகரில் நடைபெற்ற மாநாட்டில் கியோட்டா உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அதில் காபனீரொட்சைட் வாயுவின் அதிகரிப்பை குறைப்பதற்கும், $CO_2$ வாயுவின் அதிகரிப்பிற்கு காரணமாக உள்ள நாடுகள் தொடர்பாகவும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. 1990 களில் பச்சைய இல்ல வாயுக்களின் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்த நாடுகள் அவற்றை 2012 ஆம் ஆண்டளவில் 80 சதவீதத்தால் குறைக்க வேண்டும் என்பதே கியோட்டா உடன்படிக்கையில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானமாகும்.

அதனைத் தொடர்ந்து கியோட்டா உடன்படிக்கையில் கூறப்பட்டவை தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டிற்கு வருவது தொடர்பாக இந்தோனேஷியாவின் பாலித்தீவில் 2007 ஆம் ஆண்டிற்கான காலநிலை மாற்ற மாநாடு கூட்டப்பட்டது.அதன்போது கியோட்டா உடன்படிக்கையின் கால இலக்கை நீடிக்கவும், உறுப்புரிமையிலிருந்து விலகிய அமெரிக்காவை இணைத்து நீண்டகால நோக்கிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான பல உடன்பாடுகள் கொண்ட பாலி வழிகாட்டி ஏற்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே டென்மார்க்கின் கோபன்ஹேகனில் 2009 ஆம் ஆண்டுக்கான காலநிலை மாற்ற மாநாடு இடம்பெற்றது எனினும்.அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பிடிவாதத்தினால் அம்மாநாடு தோல்வியில் முடிந்தது.ஆயினும் 2010 இல் பேச்சுவார்த்தைகள் மூலம் சரியான தீர்மானங்கள் எட்டப்படும் என அம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட போதிலும் இவ்வருடம் ஏப்பிரல்.ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் கூட்டங்கள் கூட்டப்பட்டு இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதெனினும் சரியான முடிவுகள் எதுவுமே பெறப்பட்டிருக்கவில்லை.

இந் நிலையிலே தான் இவ்வாண்டுக்கான காலநிலை மாற்ற மாநாடு மெக்ஸிகோவின் கான்கன் நகரில் கூட்டப்பட்டது. ஏறக்குறைய 200 நாடுகள் வரை கலந்து கொண்ட இம் மாநாட்டில் பல்வேறு சர்ச்சைகள், குழப்பங்கள் காணப்பட்டபோதிலும் பொலிவியாவைத் தவிர ஏனைய நாடுகள் ஒரு தீர்மானத்திற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கான்கன் மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் ஆராயப்பட்ட நிலையில்,அங்கு பல்வேறு வரைவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் காபனீரொட்சைட்வாயு வெளியேற்றத்தினைக் குறைப்பது தொடர்பில் வளர்ந்துவரும் நாடுகள் அதற்கு உடன்படாவிடில் தாமும் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கப்போவதில்லையென ஜப்பான்,ரஷ்யா மற்றும் கனடா ஆகிய நாடுகள் கூறியதைத் தொடர்ந்து அது தொடர்பாக வளர்ந்த நாடுகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கதவரை தாமும் எதுவும் செய்யப் போவதில்லையென பொலிவியா போன்ற வளர்ந்த நாடுகள் தெரிவித்திருந்தன.

இந் நிலையிலும் கூட கான்கன் மாநாட்டில் வளர்ந்து வரும் நாடுகளுக்கான நிதியம் உருவாக்குதல்,புவிமேற்பரப்பில் உள்ள காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் பச்சை வீட்டு வாயுக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கான்கன் மாநாட்டில் முன்னரைப் போல் அன்றி,அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக அமெரிக்கா,ஜப்பான்,சீனா என்பன ஒப்புதல் வழங்கியபோது அதனைப் பிறநாடுகள் வரவேற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாக காணப்பட்டது.

எனினும் இம் மாநாட்டில் பச்சைய இல்ல வாயுக்களை குறைப்பது தொடர்பான வரைவு ஏற்படுத்தப்பட்டபோதிலும்,அந்த வரைவு தொடர்பாக நாடுகளின் உறுதிமொழிகளை கண்காணிப்பதற்காக எவ்விதத் திட்டமும் ஏற்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.அத்துடன் இஒ2 வாயுவை குறைப்பது தொடர்பாக இங்கு வளர்ந்த நாடுகள் எதுவும் கூறவில்லை.

ஆனால் கான்கன் மாநாட்டில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் தென் அமெரிக்கா நாடான பொலிவியா எதிர்த்துள்ளது.

"இத்தீர்மானங்களை ஏற்பதானது நாட்டின் அழிவினை ஏற்பதற்குச் சமமானது" என அந்நாட்டின் பேச்சாளர் பேப்லோ.சோலோன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கியோட்டா உடன் படிக்கை தொடர்பான எதுவித முடிவுகளும் இம்மாநாட்டின் போது எட்டப்படாதது கவலைக்குரியதாக உள்ளது எனவும், இஒ2 வாயு குறைப்பு தொடர்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் எதுவித மான தீர்மானங்களையும் முன்வைக்கவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

பல்வேறு விடயங்களை தொனிப்பொருளாகக் கொண்டு இடம்பெற்றுள்ள கான்கன் மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட வரைவுகள் காலநிலை மாற்றம் தொடர்பான விரிவான,பரந்துபட்ட அனைத்து அம்சங்களையும் கொண்ட ஒப்பந்தமாக இது அமையவில்லை.அத்துடன் எல்லோராலும் ஏற்றுகொள்ளப்படக் கூடிய முழுமையான ஒப்பந்தமாக இதனை கூற முடியாது என பி.பி.ஸி.யின் சுற்றுச்சூழல் தொடர்பான செய்தியாளர் ரிச்சட் பிளேக் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த காலங்களில் இடம்பெற்ற காலநிலைமாற்ற மாநாடுகளைப் போலல்லாது வளர்ந்த நாடுகள் தமது உடன்பாட்டினை நல்கியுள்ளமை இம்மாநாட்டில் குறிப்பிடத்தக்கதாக உள்ளதுடன் இனிவரும் காலத்தில் இடம் பெறக்கூடிய மாநாடுகளுக்கு அத்திபாரமாக இது அமைந்துள்ளது என்பதோடு உலகலாவிய ரீதியில் அனைத்துத் தரப்பினரையும் சூழல் தொடர்பில் சிந்திக்க வைத்திருக்கிறது.

த.கஜலக்ஷ்மி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181210-J.indd 4
Process Cyan Process Magenta Process Yellow



# விபசார விடுதிகளும் பொலிஸ் வேட்டையும்

எமது நாட்டில் இடம்பெற்று வரும் சமூக விரோத செயல்கள் சமூக கலாசார சீரழிவுகளைக் கட்டுப்படுத்தவும் இல்லாதொழிக்கவும் அரசு பல விதங்களிலும் முயன்று வருகின்ற போதும் முடிவு என்னவோ மீண்டும் 'முருங்கை மரத்தில் வேதாளம்' என்ற கதையாகவே தொடர்கின்றது. இவ்வாறான நிலைமைக்கு சில அரசியல் வாதிகளும் பொலிஸாருமே காரணமென்பதும் அனைவரும் அறிந்த இரகசியமாகவும் உள்ளது.

மதுவுக்கு முற்றுப்புள்ளி, பாதாளக் குழுக்கள் ஒழிப்பு, விபசார அழகிகள் வேட்டை,சல்லாப காதலர்கள் கைது என அரசு தனது அதிரடி நடவடிக்கைகளைத் தொடர்ந்தாலும் அதில் வெற்றிகாண முடியாதுள்ளது. ஒரு புறத்தால் அழித்துக் கொண்டு செல்கையில் மறு புறத்தால் அது பன் மடங்கு வீரியத்துடன் வளர்ந்து வருகின்றது. இதன் பின்னணி,காரணங்களுக்கு அண்மையில் கொள்ளுப்பிட்டி லிபேர்ட்டி பிளாஸா விபசார விடுதியை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்மித்த இடத்தில் உயர்ரக வர்த்தக நிறுவனங்களையும் கம்பனிகளையும் கொண்ட லிபேர்ட்டி பிளாஸாவில் விபசார விடுதியை நடத்துமளவுக்கு துணிவும் பணமும் இருக்கின்றதெனற்றால் அதுவும் ஒரு பெண் தலைமையில் விபசாரம் இடம்பெறுகின்றதென்றால் அதற்கு நிச்சயம் அரசியல் பலமும் பொலிஸ் செல்வாக்கும் இருக்க வேண்டுமென்பது சகலரும் அறிந்த உண்மை.இங்கும் அதுதான் நடந்தது.லிபேர்ட்டி பிளாஸாவில் பல வருடங்களாக ஓய்வு ஒழிச்சலின்றி இயங்கி வந்த இந்த விபசார விடுதியை கடந்த 10 ஆம் திகதி பாணந்துறைப் பொலிஸார் அதிரடியாக முற்றுகையிட்டபோதே பல ரகசியங்கள் அம்பலத்துக்கு வந்ததுடன் முற்றுகையின்போது அங்கிருந்த 5 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் இருவர் உஸ்பெகிஸ்த்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள்.ஏனைய மூவரும் இலங்கையர்கள்.

இந்த ஆடம்பர விபசார விடுதியில் 15க்கு மேற்பட்டவர்கள் இருந்தபோதும் பொலிஸார் இவ் விடுதியை முற்றுகையிடப் போவதாக அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்களில் பலர் அங்கிருந்து பொலிஸார் வருவதற்கிடையில் தப்பிச் சென்று விட்டனராம்.தமது முற்றுகை நடவடிக்கை இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதும் அது இவர்களுக்கு கசிந்தது தொடர்பில் பொலிஸார் அதிர்ச்சியடைந்து போயுள்ளனர்.

'சீத்தா மேடம்' என்ற பெண் தலைமையிலேயே இந்த விபசார விடுதி இயங்கி வந்துள்ளது. ஆனால் விடுதி முற்றுகையிடப்பட்டபோது அவர் வெளிநாடு சென்றிருந்ததால் தப்பிவிட்டதாக கூறப்படுகின்றது. சிலவேளைகளில் முற்றுகையிடப்படப்போகும் விடயம் முன் கூட்டியே தெரிந்ததால் அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. ஆனால் அவர் தொடர்பான பல தகவல்கள் பொலிஸாரிடம் சிங்கியுள்ளதாம்.

அரசியல் பலத்துடனும் பொலிஸாரின் ஆதரவுடனும் இயங்கி வந்த இந்த விபசார விடுதியை நீதிமன்றின் அனுமதியுடனேயே பாணந்துறைப் பொலிஸார் முற்றுகையிட்டனர். முன்னரும் பல தடவைகள் சோதனைகள்,தேடுதல்கள் நடத்தப்பட்டபோதும் எவரையும் பொலிஸார் கைது செய்யவில்லை. கடமைக்காக தேடுதல் நடத்திவிட்டுச் சென்று விடுவார்களாம்.

இந்த உயர்தர விபசார விடுதியில் அரசியல்வாதிகள், செல்வந்தர்கள்,வர்த்தகர்கள்,வெளிநாட்டினர் எனப் பலர் வாடிக்கையாளர்களாக இருந்துள்ளனர். இதனாலேயே விபசார விடுதி தொடர்பாக பொலிஸார் அறிந்திருந்தும் நடவடிக்கை எடுக்க முடியாமலிருந்துள்ளது. அத்துடன் சில பொலிஸாருக்கும் மாதாமாதம் பெருந்தொகைப் பணம் இலஞ்சமாக கொடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இங்கு 16,17 வயதுகளைக் கொண்ட அழகான பெண்கள் முதல் பிரபலமான பெண்கள் வரை பலர் விபசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஒரு நாளைக்கு 5 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபாவரை ஒரு அழகிக்கு கட்டணம் வசூலித்துள்ளனர். இந்த விபசார விடுதியில் உள்ள அழகி ஒருவரின் ஆகக் குறைந்த மாத வருமானம் 75 ஆயிரம் ரூபாவாம்.

சொகுசு அறைகளில் நடக்கும் விபசாரத்தின்போது வாடிக்கையாளர்களுக்கு ராஜ உபசரிப்பு இடம்பெறுமாம். அத்துடன் வாடிக்கையாளர்களிடம் அவர்களின் பணபலம்,செல்வாக்குகளுக்கு ஏற்ப பணம் அறவிடப்படும். ஒரு அழகி தனது மாத வருமானத்திலிருந்து 40 வீதத்தை விடுதியை நடத்தும் சீத்தா மேடத்துக்கு கொடுக்க வேண்டும் என்பதே நிபந்தனை.இதனால் சீத்தா மேடம் ஒரு மாதத்தில் பல இலட்சங்களை உழைத்துள்ளார்.

தற்போது லிபேர்ட்டி பிளாஸா விபசார விடுதி மட்டுமே அம்பலத்துக்கு வந்துள்ளபோதும் இதேபோன்ற, இதனைவிடவும் வசதி,வாய்ப்புகளைக் கொண்ட இன்னும் பல விபசார விடுதிகள் தலைநகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இதே அரசியல் பலத்துடனும் பொலிஸ் செல்வாக்குடனும் இயங்கி வருகின்றன.இவை தொடர்பான விபரங்கள் பொலிஸாருக்கு தெரிந்திருக்கின்ற போதும் அரசியல் அழுத்தங்களால் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லையெனக் கூறப்படுகின்றது.


கஸினோக்களை சட்டபூர்வமாக்கியது போல் விபசாரத்தையும் சட்ட பூர்வமாக்கிவிட்டால் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படாது என ஒரு சாரார் வாதிட்டாலும் விபசாரத்தை சட்டபூர்வமாக்கி விட்டால் நாட்டில் பெண்களுக்கு பேராபத்து ஏற்படும்.விபசாரத்தில் ஈடுபடுத்துவதற்காகவே பெண்களை கடத்தும் நிலை ஏற்படுமென மற்றோரு சாரார் எச்சரிப்பதுடன் விபசாரத்தை அழிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் போதாது என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.

விபசார ஒழிப்புத் தொடர்பில் பொலிஸாரை மட்டும் குற்றம் சாட்டவும் முடியாது.அவர்கள் நடவடிக்கை எடுக்கத்தயாரானாலும் அரசியல் அழுத்தங்கள் அவர்களைக் கட்டிப் போடுகின்றன. அரசியல்வாதிகளும் பொலிஸாரும் விபசாரத்தை அழிக்க வேண்டுமென்பதில் ஒன்றுபட்டால் மட்டுமே எமது நாட்டில் விபசாரத்தை முற்றாக அழிக்காது விட்டாலும் ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தலாம். இல்லாவிட்டால் விபசார விடுதி முற்றுகைகளும் விபசார அழகிகள் கைதும் ஒரு அன்றாட நிகழ்வுகளாகி ஊடகங்களுக்கு செய்திகளாக அமையுமே தவிர வேறெந்தப் பயனும் ஏற்பட்டுவிடாது.எனவே விபசார ஒழிப்பில் பொலிஸார் சுதந்திரமாக செயற்படுவதற்குரிய சூழலை அரசு ஏற்படுத்திக் கொடுப்பதே முக்கிய விடயமாக உள்ளது.அதனைச் செய்யாது சமூக சீரழிவுகளை ஒழிப்பதைக் கூறிக்கொண்டிருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதம் இருக்கலாமா?



நல்லதுதான்...ஆனால் கெட்டதும் கூட. பார்த்தால் நோஞ்சானாக இருப்பர் கேட்டால் நான் இன்னிக்கி விரதம்; பச்சைத் தண்ணிகூட குடிக்கமாட்டேன் என்பார். நம்பிக்கை தேவைதான். ஆனால் உடல் ஆரோக்கியத்துக்கு உலை வைக்கும் அளவுக்கு கண்மூடித்தனமாக விரதம் இருப்பது பெரிய விபரீதத்தில் கொண்டு விடும் என்பது பலருக்கும் தெரிவதில்லை. தனியாக உண்ணா நோன்பு இருப்பதாக சொல்பவர்கள் ஒன்றைக் கவனிக்கத் தவறி விட்டனர். ஒவ்வொருவரும் தினமுமே விரதம் தான் இருக்கிறோம் என்பதை. ஆம் இரவு தூங்கும் போது யாராவது சாப்பிடுகின்றனரா இல்லையே? அதுவும் விரதம் தானே. அதுவே போதும்.

**நல்லதுதான்**

உண்ணாமல் இருப்பது நல்லதுதான்; இதோ கீழ் கண்ட வகையில் இருந்தால்...

குறைந்தபட்ச உண்ணா நோன்பு தான் உடலுக்கு நல்லது. அதுவும் டாக்டர்களின் ஆலோசனைப் படி செய்தால் உடல் ஆரோக்கியத்துக்கு கைகொடுக்கும்.

உடலில் உள்ள இன்சுலின் சுரப்பது சீராவது, கொழுப்பு சத்து குறைவது, எடை குறைவது ஆகியவை இதனால் ஏற்படும் நன்மை.

இதய நோய், மூட்டு வலி, இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உட்பட சில வகை நோய்கள் தீர மருந்துகளுடன் இப்படி சில சமயம் குறைந்தபட்ச நோன்பு இருக்க டாக்டர்களே யோசனை சொல்கின்றனர்.

மன அழுத்தம், சோர்வு நீங்க குறைந்தபட்ச அளவில் வயிற்றை காயப்போடுவது நல்லது தான்.

உண்ணா நோன்பால் சில செல்கள் வளர்ச்சி அடையும். பழுதடைந்த செல்கள் புத்துயிர் பெறும். அதனால் இளமையுடன் இருக்க முடியும்.

**கெட்டது எப்போது?**

சாப்பிடாமல் வயிற்றை காயப்போடுவதால் கெடுதலும் உள்ளது. நம்பிக்கை அடிப்படையில் எதையும் பொருட்படுத்தாமல் மாதத்தில் சில நாட்கள் சாப்பிடாமல் இருப்பதும் தண்ணீர் கூட குடிக்காமல் இருப்பதும் தேவையில்லாத உடல் உபாதைகளை ஏற்படுத்தும்.

உடலுக்குத் தொடர்ந்து போக வேண்டிய சத்துகள், விற்றமின்கள் மறுக்கப்படுகிறது. அதனால் மூளை உட்பட முக்கிய உறுப்புகள் செயற்பாடு பாதிக்கும்.

தண்ணீர் கூட குடிக்காமல் இருப்பதால் சிலருக்கு வயிற்றில் பிரச்சினை உருவாகும். அதுவே பெரிய கோளாறில் விட்டு விடும்.

கழிவுகளை அகற்றும் பணியை தண்ணீர் செய்கிறது. அது குடிக்காமல் இருந்தால் உடலில் கழிவுகள் சேர்ந்து விடும்.

பெண்கள் அடிக்கடி உண்ணாமல் நோன்பு இருப்பது அவர்கள் உடலில் இரத்தச்சோகை ஏற்பட வழி வகுத்துவிடும்.

நீரிழிவு நோய் வரவும் இது ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது.



விரதம் இருப்பதற்கெல்லாம் டாக்டரைக் கேட்பதா என்று நினைக்கலாம். ஆனால் கண்டிப்பாக ஒருவரின் உடல் நிலையைக் கருத்திற் கொண்டு டாக்டர் உரிய முறையில் ஆலோசனை வழங்குவார். நாள் முழுக்க உண்ணாமல் இருப்பதால் உடலில் உள்ள கழிவுகள் நீங்கி கொழுப்பு சீராகிறது என்றாலும் அதை அடிக்கடி செய்யக்கூடாது. ஒருவருக்கு எத்தனை மணி நேரம் சாப்பாடில்லாமல் உடல் தாங்கும் என்பதை டாக்டர் தான் சொல்ல முடியும். விரதம் இருந்தாலும் அடிக்கடி தண்ணீர் குடிப்பது முக்கியம். அப்போது தான் உடலில் உள்ள கழிவுகள் நொறுங்கி வெளியேற வழி கிடைக்கும். உடலில் சோர்வும் ஏற்படாது. விரதம் முடிந்ததும் உடனே புல் கட்டு கட்டக்கூடாது. ஜூஸ் குடித்து விட்டு படிப்படியாக அளவை அதிகரித்து சாப்பிட வேண்டும்.

இப்படியும் ஆபத்து

குண்டாக இருப்பவர்கள் யாரோ சொல்வதைக் கேட்டு சாப்பிடுவதைக் குறைத்துக் கொண்டாலோ சாப்பிடாமல் விட்டாலோ உடல் எடை குறையும் என்று தவறான போக்கைக் கையாள்கின்றனர். கேட்டால் டயட்டில் இருக்கிறேன் என்பர். இது தான் மகா கெடுதல். சாப்பிடாமல் இருந்தால் கொழுப்பு குறையும் என்பது உண்மை. அதேசமயம் தவறான போக்கால் கொழுப்பு தவிர உடல் பலவீனம் அடைய வாய்ப்புண்டு. இந்த இழப்பால் கொழுப்பு அதிகமாகி மாறான விளைவை தான் ஏற்படுத்தும். இப்படி நிலைமை ஏற்பட்டால் சாப்பிடாமல் இருக்கும் ஒருவர் மேலும் குண்டாகி விடும் ஆபத்தும் உண்டு.

ஒரு நாளைக்கு இரண்டு லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்பது டாக்டர்களின் கருத்து. தண்ணீர் குடிப்பதுடன் பிரஷ்ஜூஸ் குடிப்பது மிகவும் நல்லது என்பது பலருக்குத் தெரிந்தும் இன்னமும் போத்தல் குளிர்பானத்தைத் தான் குடிக்கின்றனர். நம் உடலுக்கு 13 விற்றமின்கள் தேவை. இந்த விற்றமின்கள் ஒரேஞ் உட்பட பல பழங்களில் உள்ளன. வீட்டில் தயாரிக்கப்படும் பழரசங்களில் தான் அதிக விற்றமின் சத்துகள் உள்ளன. பழங்களை அழுகவிட்டு குப்பையில் போடுவதை விட அவற்றை ரசமாகப் பிழிந்தெடுத்து சாப்பிட்டு வந்தாலே உடலில் எடை குறைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181210-1.indd 6
Process Cyan Process Magenta Process Yellow

# நாலில் ஒருவர் இலஞ்சம் கொடுப்பவர்

ஜேர்மன் தலைநகர் பேர்லினைச் சேர்ந்த அரசு சாரா அமைப்பான டிரான்ஸ்பரன்சி இன்ரநெஷனல் – Transparency International (TI) இலஞ்சம் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் கடந்த ஆண்டு மட்டும் உலகம் முழுவதும் நான்கில் ஒருவர் காரியம் நடக்க இலஞ்சம் கொடுத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

இதில் கடந்த மூன்று ஆண்டுகளில் இலஞ்ச ஊழல் மிகவும் அதிகரித்துவிட்டதாக பத்துப் பேரில் ஆறுபேர் உலகம் முழுவதும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலஞ்சம் குறித்து உலகம் முழுவதும் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பில் கடந்த 12 மாதங்களில் நான்கில் ஒருவர் இலஞ்சம் கொடுத்துள்ளதாகக் கூறியுள்ளனர். இவ்வாறு இலஞ்சம் கொடுக்கப்பட்டவைகளில் சுகாதாரம் தொடங்கி கல்வி மற்றும் வரித்துறை வரையிலான சேவை நிறுவனங்கள் அடக்கம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தவர்களில் பெரும்பாலானோர் அதாவது 29 விழுக்காட்டினர் அதிகம் இலஞ்சம் வாங்கியவர்களில் பொலிஸ் துறையினரே என்ற கூறியுள்ளனர்.

2010 ஆம் ஆண்டில் இலஞ்சம் கொடுத்துள்ளவர்களில் அதிகம்பேர் ஆப்கானிஸ்தான், கம்போடியா, இந்தியா, ஈராக், லிபேரியா, பாலஸ்தீனம், செனகெல், சைராலியோன் மற்றும் உகண்டா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்தான் என்றும் இந்த நாடுகளில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் காரியம் சாதிக்க இலஞ்சம் கொடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் மேலே கூறியபடி 54 விழுக்காட்டினருக்கும் அதிகமானோர் தங்களது காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலஞ்சம் கொடுத்துள்ளனர். இவ்வாறு இலஞ்சம் கொடுத்தவர்களில் பாதிப்பேர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பிரச்சினை வேண்டாம் என்ற நோக்கத்திலும் கால்வாசி பேர் வேலை விரைவாக நடக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் கொடுத்ததாகக் கூறியுள்ளனர்.

இதில் மிகவும் கவலைப் படத்தக்க விடயம் என்னவெனில் கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து பொலிஸ் துறையினருக்குக் கொடுக்கப்பட்ட இலஞ்சம் தற்போது இருமடங்காக அதிகரித்துள்ளது என்பதுதான்.

மேலும், நீதித்துறை, பதிவு அலுவலகங்கள், சாரதி உரிமம் வழங்குவது போன்ற அனுமதி சேவைகளுக்குக் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் கொடுத்த இலஞ்சத்தை விட தற்போது மிக அதிகமாகக் கொடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளதும் கவனிக்கப்பட வேண்டியதாகவுள்ளது என்று கூறுகிறது அந்த அறிக்கை.

அதேசமயம், உலகளவில் எடுத்துக்கொண்டால் ஆபிரிக்காவில்தான் மிக அதிகம் பேர் இலஞ்சம் கொடுப்பதாகத் தெரிவித்துள்ளனர். கடந்த 12 மாதங்களில் அதிகாரிகளுக்குத்தான் தாங்கள் அதிகளவில் இலஞ்சம் கொடுத்துள்ளதாக இந்த ஆய்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தவர்கள் கூறியுள்ளனர்.

ஆபிரிக்காவைத் தொடர்ந்து மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆபிரிக்கா நாடுகள் அதிக இலஞ்சம் கொடுத்த நாடுகளாகவுள்ளன. இங்கு 36 விழுக்காட்டினர் இலஞ்சம் கொடுத்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இவற்றுடன் ஒப்பிடுகையில் முன்னாள் சோவியத் குடியரசுகள் 32 விழுக்காடும் தென்அமெரிக்கா 23 விழுக்காடு, பால்கான்ஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் 19 விழுக்காடு, ஆசிய பசுபிக் பிராந்தியம் 11 விழுக்காடு, ஐரோப்பிய யூனியன் மற்றும் வடக்கு அமெரிக்கா ஆகியவை ஐந்து விழுக்காடாகவும் உள்ளன.



இலஞ்ச ஊழலுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அதற்கு எதிராக போராட டிசம்பர் 9 ஆம் திகதியை இலஞ்ச எதிர்ப்பு தினமாக 2003 ஆம் ஆண்டில் அறிவித்தது ஐ.நா.

ஆனால், வெளியாகியுள்ள புள்ளிவிபரங்களைப் பார்த்தால் அது ஒரு சம்பிரதாய தினமாகப் போய்விட்டதாகவே தெரிகிறது.

இலஞ்சம் வாங்குவது எவ்வளவு குற்றமோ, அதேயளவு குற்றம்தான் கொடுப்பதும் என்பதை உணர்ந்து கொண்டால் இதுபோன்ற சம்பிரதாய தினங்களுக்குத் தேவையில்லாமல் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மணி நேரத்திற்கு 114 மரணங்கள்

இளைஞர்களுக்கு சிகரெட் பழக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் சினிமாதான் என்பது சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. சினிமாக்கள் மூலம் சிகரெட், புகையிலை கம்பனிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.90 ஆயிரம் கோடி வருமானம் கிடைக்கிறது என்றும் தெரிய வந்துள்ளது.

தீவிரமாக நடக்கும் விழிப்புணர்வு பிரசாரங்களையும் மீறிப் புகைப்பவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. புகை பிடிக்கும் பழக்கம் ஏன் உண்டாகிறது என்பது குறித்து அரசு சாரா அமைப்புகள் ஆய்வு மற்றும் கருத்துக் கணிப்பு நடத்தின. இந்த ஆய்வில் தெரிய வந்த தகவல்கள்:

உலகம் முழுவதும் புகைப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக இளைஞர்கள் அதிகம் பேர் இப்பழக்கத்தில் விழுகின்றனர்.

இவர்களுக்கு புகைப்பிடிக்கும் பழக்கம் திடீரென எப்படி வந்தது என்று ஆய்வில் கேட்கப்பட்டது. இதில் பலர் கூறியது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. 54 சதவீத இளைஞர்களும் 30 சதவீத பொதுமக்களும் சினிமா பார்த்துப் புகைபிடிக்க ஆரம்பித்தோம் என்று கூறியிருக்கின்றனர்.

சிகரெட்,புகையிலை கம்பனிகளுக்கு சினிமாக்களால் ஒவ்வொரு ஆண்டும் 90 ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைக்கிறது. உலக அளவில் இந்தியா சீனாவில் மட்டுமே புகையிலை பழக்கத்தால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகம். இப்பழக்கத்தால் உலகம் முழுவதும் சராசரியாக தினமும் ஒரு மணிநேரத்தில் 114 பேர் இறக்கின்றனர்.



மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய உலக சினிமா வியாபார நோக்கில் செய்து வரும் தவறுகளால் மக்கள் பல்வேறு தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டு உயிரிழப்புகள் அதிகரித்து வருகிறது. புகைப்பழக்கத்துக்கு அடிமையாகி நுரையீரல் மற்றும் உறுப்புகள் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடுபவர்களைப் பார்த்தால் சினிமாவில் எந்த நடிகரும் சிகரெட் பிடிக்கமாட்டார்.

தொடர் விழிப்புணர்ச்சிகள் மூலம் கோவா,பஞ்சாப் மாநிலங்களில் புகைபிடிப்போர் எண்ணிக்கை குறைந்து தற்போது முறையே 9,15 என்ற சதவீதமாகவுள்ளது. 30 வயதுக்குக் குறைந்தவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகம். புகைப்பழக்கத்தில் இருந்து இளைஞர்கள் விடுபடவும் புகைப்பழக்கம் இல்லாத சமுதாயம் உருவாகவும் நடிகர்கள் மீடியாக்களின் ஒத்துழைப்பு அவசியம். இவ்வாறு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இப்படியும் ஒரு சேவை

செக்ஸ் ஆலோசனை என்ற பெயரில் 3323 ஆண்களுடன் செக்ஸ் வைத்துக் கொண்டுள்ளார் ஒரு பெண். அவரது காதலரோ 2161 பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டுள்ளார்.

இந்தப் புள்ளி விபரத்தை அவர்களே பத்திரிகைகளுக்குப் பெருமையுடன் தெரிவித்தனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்தவர் ஜெஃப் டேனியல்ஸ் (40 வயது). இவருடைய காதலி சாரா மூர் (39 வயது) இருவரும் திருமணமாகாமல் சேர்ந்து வசிக்கிறார்கள். இவர்களுக்கு தொழிலே செக்ஸ் வாழ்க்கையில் திருப்தியில்லாதவர்களைத் திருப்திப்படுத்துவது.

யாருக்கெல்லாம் செக்ஸில் திருப்தி கிடைக்கவில்லையோ, அவர்கள் இந்த தம்பதிகளிடம் வந்தால் போதும். திருப்திப்படுத்தி அனுப்பி வைப்பார்களாம்.

முதலில் செக்ஸ் மஸாஜிலிருந்து ஆரம்பிக்கிறார்களாம். தங்களது போதனையைப் படிப்படியாக உணர்வைத் தூண்டி இறுதியில் செக்ஸ் வைத்துக்கொள்வது இவர்கள் இருவரின் ஸ்ரைல். தங்களை நாடி வந்தவர்களுக்கு திருப்தியேற்பட்ட பிறகே திருப்பியனுப்பி வைப்பார்களாம்.

இப்படி இதுவரை 3,323 ஆண்களைத் தான் திருப்திப்படுத்தியிருப்பதாக சாரா மூர் கூறுகிறார். டேனியல்ஸ் கணக்கு 2,161 பெண்கள். சில சமயத்தில் ஜோடியாக உறவில் ஈடுபட்டதும் உண்டாம்.

இது குறித்து அவர்களிடம் கேட்டால் இதிலென்ன தவறு இருக்கிறது. நாங்கள் செய்வது ஒரு சேவை ஆராய்ச்சி. இதற்காக உலகம் முழுவதும் சுற்றி வருகிறோம். இந்தத் தொழில் செய்வதால் எங்களை விபச்சாரி என்று யாரும் நினைத்துவிட வேண்டாம். ஒரு செக்ஸாலஜிஸ்ட் கூட செய்யாத பணியை நாங்கள் செய்கிறோம். எனவே, நாங்களும் டாக்டர்கள்தான் என்றார்.

நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் கவுன்சிலிங் படிப்பை படித்த போதுதான் ஜெஃப்பை சந்தித்தாராம் சாரா மூர். இது குறித்து மூர் கூறுகையில்; ஜெஃப்பை பார்த்தவுடன் காதல் கொண்டேன். அப்போது எனக்கு வயது 20. அன்று முதல் இருவரும் இணைந்தே இருக்கிறோம்.

நான் 15 வயதில் எனது கன்னித் தன்மையை இழந்தேன். அன்றே செக்ஸ் எனது வாழ்க்கையில் மிகப்பெரிய பங்காற்றும் என்பதை உணர்ந்தேன் என்கிறார்.

இந்தத் தம்பதிகளிடம் செக்ஸ் பிரச்சினையுள்ளவர்களை பல நேரங்களில் டாக்டர்களே அனுப்பி வைக்கிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின்ற சொல்லர்

முனைவர் க.வெள்ளிமலை

இவ்வுலகம் நீரின்றமையாது என்பது மாந்தர் யாவரும் தெளிந்த உண்மைதான். அதைத் தலைவன் அறிந்தவனாயினும் பொருளிலார்க்கு இவ்வுலகம் நிலைபெறாது என்பதையும் தெளிந்து பொருள் ஈட்டுதற் பொருட்டுத் தன் அருமந்த மனையாளைப் பிரிய எண்ணினான். இக்கருத்தை இன்னும் தன் மனைவியிடம் சொல்லவில்லை. ஆனால் அவனது மன ஊசலாட்டத்தை அறிந்த தலைவியின் தோழி, தலைவன் பிரிய நினைக்கும் எண்ணத்தை அவளிடம் மெல்ல எடுத்துரைத்தாள். அதனைப் பொறாத தலைவி தன் தோழியிடம் தன் கொழுநர் தலைவன் இயல்பு,பண்பு குறித்து எடுத்துரைத்தாள்.

தோழி உன் சொல்லைக்கேட்டு நான் கலங்க வேண்டுமா?எனது நெஞ்சில் குடியிருக்கும் என் மணாளர் என்னைப்பிரிய இருப்பதாகச் சொல்ல உன் மனம்தான் எப்படித்துணிந்தது? என் கொழுநர் பண்பு பற்றி நீ அறிவாயா? அவர் உன்னை விட்டுப்பிரியேன்.பிரியின் தரியேன் என்று என்னிடம் கூறிய உறுதிமொழியை மறந்துவிடுவாரா? எப்படி வேண்டுமானாலும் பிறழும் நரம்பில்லாத நாக்கு உடையவரா அவர்?என் காதலர் உண்மை நிலைமை தவறாத வாய்மை உடையவர். அது மட்டுமா? நெடுங்காலமாக இனிமையுடன் பழகி என்னை மகிழ்விப்பவர். எப்பொழுதும் என் தோள்களைப் பற்றித் தழுவும் அவர் அவற்றைப் பிரியும் இழிந்த பண்பாடு இல்லாதவர். அத்தகைய தகைமை உடையவரின் நட்பானது தேனீ தாமரைப் பூவின் குளிர்ந்த தாதினையும் (மகரந்தத் தூள்) நறுமணம் கமழும் சந்தனத்தின் தாதினையும் ஊதி சந்தன மரத்திலே கட்டிய இனிய தேனடைப்போல் நெடிதாகச் சுவை நல்குமனதோ தவிர தண்ணீரில்லாமல் இயங்காத உலக ஒழுகலாறுபோல அவரில்லாமல் வாழமுடியாத என்னிடம் மிகுந்த அன்பும் அருளும் காட்டிப்பின்பு என்னைவிட்டுப்பிரிய உள்ளந்தான் விரும்பும? ஆனால் அவ்வாறு பிரியின் ஒளிமிக்க எனது நெற்றியில் பசலை ஏற்படுமா என்று அஞ்சி யாதும் செய்வதை அறியாது தடுமாற்றம் அடைவரோ? (அதாவது தலைவியின் நெற்றியில் உள்ள ஒளி தலைவன் பிரிவால் மழுங்கித் தோன்றுமோ என்ற கருத்து நறுநுதல் பசத்தல் அஞ்சி என்பதன் வாயிலாகப் பெறப்படுகிறது) அங்ஙனம் ஒருகாலும் எனக்குச் சிறுமை செய்யமாட்டார் என்பதை நீ அறிந்து கொள் தோழி என்கிறாள்.

கபிலர் பாடிய நற்றிணை பாடலில் (நற்-1) தாமரைப் பூவின் தாது தலைவன் உள்ளத்துக்கும் சந்தனத்தின் தாது தலைவியின் நெஞ்சத்துக்கும் உவமையாகின்றன. தேனீ முதலில் தாமரைப் பூவின் தாதிலும் அடுத்து மணங்கமழும் சந்தன மரத்திலே தேனடையக் கட்டிவைத்தது பயன்தரத்தக்கதுதானே! தலைவன் தலைவி மீது அன்பைச் சொரிந்தான் என்பது இங்கு குறிக்கத்தக்கது.

இலக்கிய சுவை...

இயற்கைப் புணர்ச்சியின் இறுதியில் நின்னிற் பிரியேன் என்று சொன்னதை இதுகாறும் நிலைநாட்டி வந்துள்ளான் தலைவன்.அச் சத்தியத்தை இன்னும் நிலைநாட்ட முனைந்து என்னைப் பிரிய நினைக்கமாட்டான் என்ற கருத்தில் நின்ற சொல்லர் என்கிறாள்.

இவ்வண்ணம் தலைவி தன் காதலரின் பண்புகளையும் இல்லறச் செம்மையையும் தன் தோழிக்கு எடுத்துரைப்பதை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது அன்றோ!பாடலைக் காண்போம்.

**நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்**
**என்றும் என்தோள் பிரிபு அறியலரே**
**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம் தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீரின்று அமையா**
**உலகம் போலத்**
**தம்மின்று அமையா நம் நயந்தருளி**
**நறு நுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ செய்பு அறியலரே**
**(நற்றிணை பா-1)**

# உயர்திணைக்கு சாட்சி – அஃறிணை

முனைவர் அ.செல்வராசா

களவு,கற்பு என்ற இருவகையான வாழ்க்கைப் படிநிலையில் தலைமக்களின் அன்பு நிலையை உணர்த்த அஃறிணை உயிர்களின் வாழ்க்கையைச் சுட்டிக்காட்டுவது புலவர்களது மரபு. அதைச் சங்க இலக்கியத்தில் குறிஞ்சி பாலைத் திணைப் பாடல்களில் காண முடியும். பாலைத்திணைப் பாடல்களில் தான் அப்பதிவு மிகுதியாக உள்ளன.

விலங்குகளின் அன்பு நிலையைச் சுட்டிக் காட்டும் பாடல்கள் அதிகமாக உள்ளன. ஆயினும் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாடல் ஒன்றில் தலைமக்களின் களவொழுக்கத்துக்கு அஃறிணை உயிர்கள் சாட்சியாக உள்ளதாகப் பாடப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.கொல்லன் அழிசி என்ற புலவர் பாடிய குறுந்தொகை 26 ஆவது பாடல் மிகச் சிறப்பக அமைந்துள்ளது. இது செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றதாகும். குறிஞ்சி நிலத்தலைவனை விரும்பிய தலைவி ஒருத்தி அவனைக் காண முடியாமல் வருந்தி இருந்தாள். சரியான உணவும் உறக்கமும் இல்லாதிருந்ததால் உடல் மெலிந்தாள். இதை அறிந்த தாய் இம்மாற்றத்துக்குக் காரணம் யாது என்று கட்டுவிரிச்சியை அழைத்துக் குறிகேட்க அவளோ மலைநாட்டு தெய்வந்தான் காரணம் என்றாள்.இதைக் கேட்ட தோழி,தலைவி நோய்க்குக்காரணம் மலைநாட்டுதலைவன் தான் என்பதை மலையிலே பல குட்டிகளுக்குத் தந்தையான ஆண் குரங்கு (கடுவன்) அறியும் என்றாள். அத்தோழி கூற்றுப்பாடல் வருமாறு;

**அரும்புற அற மலர்ந்த கருங்கால் வேங்கை**
**மேற்கு எழு பெருஞ்சினை இருந்த தோகை**
**பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்**
**தகா அன் போலத் தான்தீது மொழியினும்**
**தன்கண் கண்டது பொய்க்குவது என்றே**
**தேக்கொக்கு அருந்தும் முள் எயிற்றுத் துவர்வாய்**
**வரைஆடு வன்புறழ்த் தந்தைக்**
**கடுவனும் அறியும் அக்கொடியோனையே**

பொதுவாக பறவை விலங்குகளைச் சுட்டிக் காட்டி அவைகளின் அன்பு நிலையை விளக்குவது அதன் வழித் தலைமக்களுக்கு அன்பின் ஆழத்தை உணர்த்துவதும்தான் புலவர்களின் நோக்கம்.ஆனால், தலைவனும் தலைவியும் கலந்திருந்ததற்கு இப்பாடலில் ஆண் குரங்கு சாட்சியாகக்காட்டப்பட்டுள்ளது.இது பொது மன்றத்துக்கு வந்து தலைவிக்குத் துணையாக சாட்சி சொல்லப்போவதில்லை.பிறகு எதற்காக சாட்சிகள் போல் காட்டப்பட்டிருக்கவேண்டும்?

தலைமக்கள் இருவரும் கலந்திருந்ததைக் குட்டிகளோடு குடும்பத்தோடு இருந்த கடுவன் தான் பார்த்தது. அதைப்பார்த்ததும் தலைவன் இன்னும் இல்லறத்தானாக மாறாமல் இருக்கிறானே என்பதுதான் இப்பாடலில் தோழி கூற விரும்பிய கருத்து.

க அஃறிணைகள் எல்லாம் அதனதன் நோக்கத்தில் உறுதியாக இருக்க உயர்திணையைச் சார்ந்த தலைவனோ அவ்வாறு இல்லையே என்பதைச் சுட்டுவதே இப்புலவர் பாடிய பாடலின் உள்நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் வாழ்த்து அட்டை



பிறந்தநாள்,தீபாவளி,புத்தாண்டு,பொங்கல்,கிறிஸ்மஸ் என முக்கியமான விழாக்களைக் கொண்டாடும்போது ஒருவருக்கொருவர் வாழ்த்து அட்டைகளை பரிமாறிக் கொள்வது வழக்கம். தற்போது பரவலாக உள்ள இந்தப்பழக்கத்தை முதன் முதலில் தோற்றுவித்தவர் யார் தெரியுமா?லண்டனில் உள்ள விக்டோரியா மற்றும் ஆல்பர்ட் அருங்காட்சியகத்தின் முதல் இயக்குநரான சேர் ஹென்றி கோல் என்பவர் தான்.முதல் வாழ்த்து அட்டையை உருவாக்கியதாக வரலாற்று அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். 1843 ஆம் ஆண்டு ஜோன் கோல்காட் ஹார்ஸ்லீ என்ற பிரபலமான ஓவியரிடம் வாழ்த்து அட்டையைத் தயார் செய்யுமாறு கூறினார் ஹென்றி. திறந்த நீள் சதுரத்தில் கொடிப்பந்தல் வீட்டைப் பின்னணியாகக் கொண்டு மூன்று படங்களை அவர் வரைந்தார். அதில் விக்டோரியா காலத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் ஒரு மேசையைச் சுற்று அமர்ந்திருப்பார்கள். அங்கு இல்லாத ஒரு நண்பனுடைய உடல்நலத்தை வாழ்த்தி மது அருந்துவதாக அந்தப்படத்தில் வரையப்பட்டிருந்தது. இதைத்தவிர நீதி புகட்டும் இரண்டு படங்களும் அதில் இடம் பெற்றிருந்தன. அந்த வாழ்த்து அட்டையில் மகிழ்ச்சியன கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள், என்ற வாசகமும் காணப்பட்டது.இதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு தற்போதும் வாழ்த்து அட்டைகள் அனுப்பப்பட்டு வருகின்றன.




## குறுக்கெழுத்துப்போட்டி - 64

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | ■ | 16 |
| ■ | 17 | 18 | 19 | 20 | ■ |
| 21 | ■ | ■ | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | ■ | 28 | ■ |

**இடமிருந்து வலம்**

1. இது சிங்கள மொழியில் மட்டுமே பாடப்பட வேண்டுமென கூறப்படுகிறது
7. கடலில் கிடைப்பது
10. உயிர் என்றும் கூறலாம் (திரும்பியுள்ளது)
12. அவதானம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
17. இலட்சினை (குழம்பியுள்ளது)
22. அழித்தல் (திரும்பியுள்ளது)
25. உறவு முறை ஒன்று (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. நாடு
2. யாழி
3. சட்டி, பானை செய்பவன் (குழம்பியுள்ளது)
5. மரம் என்றும் சொல்லலாம்
6. இசைக்கருவி ஒன்று (குழம்பியுள்ளது)
15. கோபம் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது)
20. செல்வம் (குழம்பியுள்ளது)
21. இது வலியது என்பர்

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 62 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. வாக்கு | 1. வாசல் |
| 4. பாடை | 3. குரக்கன் |
| 7. வாக்கு | 4. பாடம் |
| 11. ரணில் | 5. வடை |
| 15. முகம் | 12. வணிகம் |
| 19. கன்னி | 18. பாகன் |
| 22. பாவி | 22. காவி |
| 25. காலன் | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**


**ஏ.எச்.அப்துல்லாஹ்,**
இல. 22 A, இந்திரிலியகொட,
மக்கோனை.

### பாராட்டுப் பெறுவோர்

01. கே.லக்ஷியா, இல. 125, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
02. திருமதி ரீ.செல்வதுரை, இல. 11 5/1, சென் லோரன்ஸ் வீதி, கொழும்பு-06.
03. எம்.எப்.எம்.ரிம்ஸாத், இல. 115, அண்ணல் வீதி, கிண்ணியா - 03.
04. ஆர்.துஷார ஷாந்தி, பத்தவத்தை, மடுல்சிமை.
05. க.குணேஸ்மதி, கோயில் பின் வீதி, சித்தாண்டி - 03, சித்தாண்டி.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

## பார்க்க முடியாத கிரகம்



சூரியக்குடும்பத்தில் உள்ள புதனைத்தான் பார்க்க முடியாத கிரகம் என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். ஆங்கிலத்தில் மெர்குரி என்று அழைக்கப்படும் புதன் சூரியனுக்கு அடுத்ததாக அமைந்துள்ளது. புதன் குறித்த சில அடிப்படைத் தகவல்களைப் பார்ப்போம்.

பூமியின் விட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு தான் புதனின் விட்டம் அதேபோல பூமியின் மொத்த எடையில் 5.5 சதவீதம் தான் புதனின் எடை.

சூரியனை மிக வேகமாகச் சுற்றிவரும் புதன் சூரியனில் இருந்து சுமார் 5.8 கோடி கிலோமீற்றர் தொலைவில் இருக்கிறது.

நம்முடைய நாள் (24 மணிநேரம்) கணக்குப்படி 88 நாட்களில் சூரியனைச் சுற்றி வருகிறது. புதன் அதாவது புத்னில் ஒரு வருடம் என்பது நமக்கு 88 நாட்களாகும்.

புதன் தன்னைத்தானே சுற்றிக்கொள்ள 55 நாட்கள் எடுத்துக் கொள்கிறது.

மெர்குரி என்பது ரோம் நாட்டிலுள்ள சந்தனத்தால் ஆன இறக்கைகளைக் கொண்ட தேவதூதனின் பெயராகும்.

இந்தக் கிரகம் சூரியனுக்கு மிக அருகில் இருப்பதால் சூரிய ஒளியின் பிரகாசத்துக்கு நடுவே இதைக் காண்பது கடினம்.பொதுவாக சூரிய உதயத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பும் சூரிய அஸ்தமனத்திற்கும் ஒரு மணி நேரத்திற்குப் பின்பும் தான் இதைப் பார்க்கமுடியும். அதையும் எப்போதாவது தான் பார்க்கமுடியும். எனவே புதனைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

புதனுக்கு மிக மெல்லிய வளிமண்டலம் இருக்கிறது. இந்த வளிமண்டலம் சோடியம், பொட்டாசியம்,ஹீலியம் மற்றும் ஹைட்ரஜனால் ஆனது.

பகல் நேரத்தில் 427 டிகிரி செல்சியஸ் வெப்பமும் இரவு நேரத்தில் 173 டிகிரி செல்சியஸ் வெப்பமும் புதனில் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநோயாளர்களை விற்ற தொண்டர் நிறுவனம்

சீனாவின் வடமேற்கில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் சிலர் தொழிற்சாலை ஒன்றில் அடிமைகள்



போன்று நடத்தப்பட்டு வேலை வாங்கப்பட்டு வந்துள்ளனர் என்று வந்துள்ள தகவல்கள் தொடர்பில் அந்நாட்டின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களை தொண்டு நிறுவனம் ஒன்று அத்தொழிற்சாலையிடம் விலைக்கு விற்றிருப்பதாய்த் தெரிகிறது. அத்தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்றும் மிகக் கேவலமான சூழல்களில் வாழ்ந்துவந்துள்ளனர் என்றும் அந்நாட்டு ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடிமைகள் போன்றதொரு வாழ்க்கையையே இந்த மனநலம் பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்கள் செய்த வேலைக்கு சம்பளம் இன்றியும் செய்யும் வேலைக்கு ஏற்றது போன்ற பாதுகாப்பான ஆடைகள் இன்றியும் வருடக்கணக்கில் குளிக்கக்கூட வழியின்றியும் இவர்கள் இருந்து வந்துள்ளனர் என்றும் ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தொழிற்சாலை முதலாளியின் நாய் சாப்பிட்ட அதே சாப்பாட்டைத்தான் இத்தொழிலாளிகளும் சாப்பிட்டு வந்ததாகத் தெரிகிறது.

இந்த அவல நிலையில் இருந்து தப்பிச்செல்ல முயன்றபோது தன்னைப்பிடித்து கண்மூடித்தனமாக அடித்து உதைத்திருந்தார்கள் என்றும் ஒரு தொழிலாளி கூறுகிறார்.

மனநலம் பாதிக்கப்பட்டு சிச்சுவான் பிராந்தியத்தில் திரிந்துகொண்டிருந்த இந்த நபர்களை தொண்டு நிறுவனம் ஒன்றை நடத்துவதாகக் கூறிக்கொண்ட நபர் ஒருவர் பிடித்துச் சென்று நாட்டின் வடமேற்கிலுள்ள ஜின் ஜியாங் மாகாணத்தில் கட்டுமானத் தொழில்துறைக்குப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றுக்கு விற்றுவிட்டுள்ளார்.


இவர்களை விற்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுவிட்டார். என்றாலும் இன்னும் அத்தொழிற்சாலையின் முதலாளி பிடிபடவில்லை. பொலிஸார் அவருக்கு வலை வீசி வருகின்றனர். விசாரணைகளை மேற்கொள்வதற்காக அதிகாரிகள் அத்தொழிற்சாலைக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

சீனாவில் இப்படியான விடயங்கள் வெளிவருவது என்பதும் இது முதல் தடவைதான் என்றில்லை. மூன்று வருடங்களுக்கு முன்பு ஷான்ஸி பிராந்தியத்தில் செங்கல் சூளை ஒன்றில் கிட்டத்தட்ட நூறு தொழிலாளிகள் அடிமைபோல் வேலை வாங்கப்பட்டு வந்திருந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இப்படியான அவலங்கள் மறுபடியும் நடக்காமல் தடுத்து நிறுத்துவோம் எனப் பொலிஸார் அச்சமயம் வாக்குறுதியளித்திருந்தனர்.

ஆனால், பொலிஸார் அதிலே வெற்றியடையவில்லை என்பதை இந்தச் சம்பவம் காட்டுகிறது.

# இலக்கு வைக்கப்படும் ஆசிரியர்கள்



பாகிஸ்தானின் பிரச்சினைக்குரிய மாகாணமான பலுசிஸ்தானில் தீவிரவாத குழுக்கள் ஆசிரியர்களைத் திட்டமிட்டு இலக்கு வைத்துக் கொலை செய்வதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது. 2008 ஜனவரி முதல் 2010 அக்டோபர் வரை அந்த மாகாணத்தில் குறைந்தபட்சம் 22 ஆசிரியர்கள் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

'அவர்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது' என்ற தலைப்பில் வெளியான அந்த அறிக்கையில் பலுசிஸ்தானில் நடந்த அத்தகைய பல தாக்குதல்கள் குறித்து கூறப்பட்டுள்ளது.

பெரும் கனிம வளங்கள் நிறைந்த மாகாணமாக இருக்கின்ற போதிலும் பலுசிஸ்தான், பாகிஸ்தானின் மிகவும் வறிய மற்றும் சமூக ரீதியாக பிந்தங்கிய மாகாணமாக இருக்கின்றது.

இந்த மாகாணம் தற்போது உள்ளூர் பழங்குடியின் ஆட்களின் தேசியவாத கிளர்ச்சியின் மையமாகத் திகழ்கிறது.

மத தீவிரவாதிகளின் வதிவிடமாகவும் இது கணிக்கப்படுகிறது.

இரு குழுக்களும் இத்தகைய தாக்குதல்களில் ஈடுபடுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறுகிறது.

இஸ்லாமாபாத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர்மாநாடு ஒன்றில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆசிரியர்கள் இவ்வாறு கொல்லப்படுவது நிறுத்தப்படாவிட்டாலும் பலுசிஸ்தானின் சிறார்களின் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வன்செயல்கள் தொடர்ந்தால் அந்த மாகாணத்துக்கு சுபிட்சமும் முன்னேற்றமும் கிட்டுவது சிரமமாகிவிடும் என்றும் அவர் கூறினார்.

பலுசிஸ்தானில் பொதுமக்கள் எவ்வாறு இலக்கு வைக்கப்படுகிறார்கள் என்பது குறித்து ஆவணப்படுத்திய முதலாவது சர்வதேச மனித உரிமைக்குழு மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகும்.

வாக்குமூலங்கள் மற்றும் நேரில் கண்ட உறவினர்கள் சக ஆசிரியர்கள் ஆகியோரின் சாட்சியங்கள் ஆகியவற்[illegible]கக் கொண்டு இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்கள் மிகவும் மோசமாக அதிகரித்து வருகின்ற நிலையில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் அந்த மாகாணத்துக்கு வெளியே தமக்கு இடமாற்றம் தருமாறு கோரிவருகிறார்கள்.

பஞ்சாப் மாகாணத்தில் இருந்து வந்தவர்களே அதிகம் இலக்கு வைக்கப்படுகிறார்கள். பாகிஸ்தானிய இராணுவம் பஞ்சாபியர்களால் பெருமளவு நிறைந்திருக்கும் நிலையில், அதற்கான பதிலடியாக அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு இலக்கு வைக்கப்படுகிறார்கள்.

ஆனால், தலிபான்களுடன் தொடர்பு வைத்துள்ள உள்ளூர் சுனி தீவிரவாதக் குழுக்களும் இந்தக் கொலைகளுடன் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் ஷியா பிரிவினரைக் குறிப்பாக மாகாண தலைநகர் குவட்டாவில் இலக்கு வைக்கிறார்கள்.


பலுசிஸ்தானில் மேலதிகமாக பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை இந்த வன்செயல்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே பாகிஸ்தானிய இராணுவம் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயகியான திருநங்கை



**ச**கோதரி என்ற பவுன்டேஷனை நடத்தி வருபவர் திருநங்கை கல்கி. எம்.ஏ.படித்தவரான இவர் திருநங்கைக ளுக்கான திருமண இணையத்தளத்தையும் நடத்தி வருபவர்.தமிழகத்தின் பிரபலமான திருநங்கைகளில் இவரும் ஒருவர். திருநங்கைகள் நலனுக்காக பாடுபட்டு வருபவர். இந்த நிலையில் தற்போது கல்கி திரைப்பட நாயகியாகியுள்ளார்.நர்த்தகி என்ற படத்தில் நாயகியாக நடிக்கிறார் கல்கி. திருநங்கைகள் குறித்த படம் இது. திருநங்கைகளை நல்ல வெளிச்சத்தில் காட்டும் கதை என்பாதால் இப்படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டதாக கூறுகிறார் கல்கி.புன்னகைப் பூ கீதா இப்படத்தை தயாரிக்கிறார்.விஜயபத்மா இயக்குகிறார்.திருநங்கைகளின் வாழ்க்கையை அழகுற சித்திரித்த முதல் படம் என்ற பெருமை இப்படத்திற்குக் கிடைக்கும் என்கிறார்கள் படக் குழுவினர்.



## ரஜினி நடிக்க விரும்பிய இயக்குநர்





**பி**ரபல இயக்குநர் கே.விஸ்வநாத் படத்தில் நடிக்க விரும்பினேன். என சூப்பர் ஸ்டார் ரஜினி தெரிவித்துள்ளார். சங்கராபரணம்,சலங்கை ஒலி,சிப்பிக்குள் முத்து என பல சூப்பர் ஹிட் படங்களைத் தந்தவர் இயக்குநர் கே.விஸ்வநாத்.இவர் அதிகமாக கமலஹாசனை வைத்து மட்டுமே படங்கள் எடுத்தார்.ஆனால் ரஜினியுடன் இணையவில்லை.விஸ்வநாத் இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்று ரஜினியின் நீண்டநாள் விருப்பமாக இருந்துள்ளது. இதுபற்றி ரஜினி சமீபத்தில் கூறுகையில், 'கே.விஸ்வநாத்தை விமான நிலையத்தில் ஒரு முறை சந்தித்தேன். அப்போது சாகரசங்கமம் அவருடைய பெரும் வெற்றிப் படம். நிறைய விடயங்கள் பற்றி பேசிக்கொண்டு இருந்தோம்.அப்போது அவர் இயக்கும் படமொன்றில் நான் நடிக்கவேண்டும் என்று என்னிடம் கேட்டார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. உடனே ஒப்புக் கொண்டேன். ஆனால் எனக்கு வேறு சில படங்கள் இருந்தன. அவற்றை முடித்துக் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. இதனால் விஸ்வநாத் படத்தில் நடிக்க முடியாமல் போய்விட்டது. அதன் பிறகு அந்த படமும் எடுக்கப்படாமலேயே நின்றுவிட்டது. விஸ்வநாத் படத்தில் நான் நடித்திருந்தால் அவர் என்னை வேறு பரிமாணத்தில் காட்டியிருப்பார்.என் சினிமா வாழ்க்கையில் முக்கியமான படமாக இருந்திருக்கும்' என்றார் ரஜினி.ரஜினி விருப்பம் பற்றி விஸ்வனாத்திடம் கேட்டபோது, ரஜினியை வைத்து படம் எடுக்க இப்போது கூட காலம் கடந்து விடவில்லை என்றார்.

## Saturday சினிமா



சிறுத்தை – கார்த்தி, தமன்னா

## இந்து முறைப்படி திருமணம் செய்யும் ஏஞ்சலினா

**ஹா**லிவுட் பிரபலங்களான ஏஞ்சலினா ஜூலியும்,பிராட் பிட்டும் அடுத்த ஆண்டு இந்து முறைப்படி இந்தியா வந்து திருமணம் செய்து கொள்ளவிருக்கின்றனர்.யோகா,இந்து முறைப்படி திருமணம்,இந்து மதத்தை தழுவுதல் என்று இந்துத்துவ நடைமுறைகள் ஹொலிவுட்டில் பிரபலம் அடைந்து வருகிறது. இந்த வரிசையில் ஹொலிவுட்டின் கனவுக் கன்னி ஏஞ்செலினா ஜூலியும்,அவரது கணவர் பிராட் பிட்டும் இந்து முறைப்படி ஒரு திருமணம் செய்யவுள்ளனராம். இதை இந்துக்கள் வரவேற்றுள்ளனர். திருமணச் சடங்குகளை சித்தா குரு என்பவர் செய்யவுள்ளார். புத்தாண்டில் ஜூலியும்,பிட்டும் திருமணம் செய்துகொள்ளப்போவதாகவும்,ராஜஸ்தான் மாநிலம் பிகானீரைச் சேர்ந்த குரு ராம் லால்ஜி சியாக் திருமண சடங்குகளைச் செய்வார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.மேலும் ஜூலியும்,பிட்டும்,அவர்களுடைய 5 ஆண்டு உறவை பலப்படுத்த லால்ஜி சியாக்,சித்த யோகா கற்றுக் கொடுப்பதாகவும் தெரிகிறது.அவர்களுக்கு ஒரு மந்திரத்தை கற்றுக் கொடுத்து,அதை தினமும் காலையிலும்,மாலையிலும் கூறுமாறு அறிவுறுத்தியுள்ளாராம். இந்த சியாக்.இருப்பினும் இந்து முறைப்படி திருமணம் செய்து கொள்வது பற்றி ஜூலியும்,பிட்டும் இன்னும் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவலன் – விஜய்

# இழுத்தடிக்கும் காவலன்

காவலன் படத்தை 17 ஆம் திகதி வெளியிடுவதாக அறைகூவல் விடுத்திருந்தார் படத்தை வாங்கியிருக்கும் 'திடீர்' கோடீஸ்வரர் ஷக்தி சிதம்பரம்.ஆனால் படம் 24 ஆம் திகதிதான் வெளியாகும் என்று தகவல் கசிந்தது. ஆனால் நிலைவரம் இன்னும் மோசம்.படம் பொங்கலுக்குதான் வெளியாகும் என்கிறார்கள்.ஜெயலலிதா, எஸ்.ஏ.சந்திரசேகரன் சந்திப்பால் சந்தோஷத்தில் சதிராடிக் கொண்டிருக்கிறார்கள் விஜய் ரசிகர்கள்.விரைவில் விஜய் மாநாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாநாட்டுக்குப் பிறகு காவலனை வெளியிடலாம் என்று மேலிடம் கருத்து தெரிவித்ததை யொட்டியே பொங்கலுக்கு படவெளியீட்டை தள்ளி வைத்ததாகவும் கூறுகிறார்கள்.காவலன் இப்போதைக்கு குழப்பிய குட்டை. தெளியும் வரை வலை வீசிக் கொண்டுதான் இருப்பார்கள்.

# விலகும் விஜய்



'அண்ணே அண்ணே' என்று அன்பை பொழிந்தாலும் தொழில்னு வரும்போது 'தூரப் போ' என்று சொல்லிட்டாரே... இப்படி புலம்புகிறாராம் ஜீவா. வேறொன்றுமில்லை. விஜய் விடயத்தில் இரண்டு சறுக்கல்களை சந்தித்திருக்கிறார் ஜீவா.முதல் சறுக்கல் த்ரி இடியட்ஸ்.விஜய் இதில் நடிக்கிறார் என்பதாலும் படத்தை ஷங்கர் இயக்கப் போகிறார் என்பதாலும்தான்.மூன்று நாயகன் கதையில் நடிக்கவே ஒப்புக்கொண்டார் ஜீவா. ஆனால் அப்படத்தில் இப்போது விஜய் இல்லை.(படமே இல்லை என்றார்கள் கோடம்பக்கத்தில்.அது வேறு விடயம்) என்ன காரணம் என்பதை வேண்டுமளவு அலசி ஆராய்ந்தாச்சு என்பதால் அடுத்த விடயத்துக்கு போவோம்.ஜீவா நாயகனாக நடிக்கும் 'கோ' படத்தில் ஒரு பாடல் காட்சி இடம்பெறப்போகிறது.அதில் தமிழின் முன்னணி நடிகர்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு வரியை திரையில் வந்து பாடிவிட்டு செல்வதாக காட்சி.கிட்டதட்ட ஒரு ஆல்பம் போலிருக்கும். இந்த பாடல் மிகப்பெரிய வெற்றியடையும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார் படத்தின் இயக்குனர் கே.வி.ஆனந்த். ஆனால் இந்த நட்சத்திரக் குழுவிலிருந்து முதல் செங்கல் உருவப்பட்டிருக்கிறது. உருவியவர் சாட்சாத் விஜய்தான்.சூர்யா,சிம்பு,விக்ரம்,கார்த்தி,ஆர்யா,ஜெயம்ரவி என்று பலரும் தலைகாட்ட சம்மதம் தெரிவித்திருந்த நிலையில் விஜய் மட்டும் 'சாரி.என்னால முடியாது' என்று கூறி விட்டாராம்.

# சுந்தர் சி.யின் முடிவு



உத்தரவாத இயக்குனர் என்ற பெயருடன் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது சுந்தர் சி.யின் இயக்குனர் வண்டி. கணவரை நாயகனாக்ப் பார்க்க வேண்டும் என்ற குஷ்புவின் விபரீத ஆசை அவரை நடிகராக்கியது.முதலில் சில படங்கள் சுமாராகப் போனதால் நாயகனாகவே தொடர்ந்தார் சுந்தர் சி.ஆனால் ரசிகர்களும் மனிதர்கள்தானே? எத்தனை நாளைக்குப் பொறுப்பார்கள்? சமீபத்தில் வெளியான சுந்தர் சி.யின் எந்தப் படமும் இலாபத்தை சம்பாதிக்கவில்லை. நஷ்டமோ எக்கச்சக்கம்.இறுதி முயற்சியாக வடிவேலுடன் கூட்டணி அமைத்து தானே இயக்கியும் பார்த்தார். அந்தப் படமும் பணால்.தொடர் தோல்வியால் திணறிப் போனவர் நடிப்பதை விட்டுவிட்டு இயக்குனராக மட்டும் தொடர்வது என முடிவு செய்திருக்கிறாராம்.சுந்தர் சி.இதனை அதிகாரபூர்வமாக அறிவித்தால்,2011யின் முதல் நற்செய்தி அதுவாகத்தான் இருக்கும்.



அனுஷ்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலாந்துக்குள் ஊடுருவிய உளவு அழகிகள்

இங்கிலாந்துக்குள் உளவு பார்க்கும் பணிக்காக 20 அழகிகளை ரஷ்யா ஈடுபடுத்தியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. தற்போது 2 அழகிகளை இங்கிலாந்து உளவுத் துறையும் பொலிஸ் துறையும் கைது செய்துள்ளன.

லண்டனைச் சேர்ந்த சண்டே ரைம்ஸ் இச்செய்தியை வெளியிட்டுள்ளது. இங்கிலாந்தில் உள்ள தொழிலதிபர்கள்,அரச அதிகாரிகள்,வெளிநாட்டு தூதர்கள் ஆகியோரிடம் உளவு பார்க்கும் பணிகள் நடந்துள்ளன.

இந்தப் பணிக்காகவே இந்த 20 அழகிகளையும் ஏவி விட்டுள்ளது ரஷ்யா. இந்த அழகிகள் சம்பந்தப்பட்டவர்களை அணுகி அவர்களுக்கு தாராளமாக செக்ஸ் விருந்து வைத்து தகவல்களைக் கறந்து ரஷ்யாவுக்கு அனுப்பி வைத்துள்ளனராம்.

இந்த உளவு அழகிக் கும்பலுக்கு அன்னா சாப்மேன் என்பவர்தான் தலைவி போல செயல்பட்டுள்ளார். இங்கிலாந்தில் படித்து வரும் ரஷ்யா,பெலாரஸ்,உக்ரைன்,ஆர்மீனியா ஆகிய முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளைச் சேர்ந்த அழகான மாணவிகளைத் தேர்ந்தெடுத்து உளவுப் பணிக்கு ஈடுபடுத்தியுள்ளார். இதற்காக இவர்களுக்குப் பெரும் பணம் சம்பளம் போல தரப்பட்டுள்ளதாம்.

இந்தச் செய்தியால் இங்கிலாந்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. யார் அந்த 20 அழகிகள் என்ற பரபரப்பும் கூடியுள்ளது. அவர்களைப் பிடிக்கும் நடவடிக்கையும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

பொலிஸ் வேட்டையில் அன்னாவும் 25 வயதான காத்யா ஜாடுலிவேட்டரும் கைதாகியுள்ளனர். இருவரும் நாடு கடத்தப்படுவர் என்று தெரிகிறது. அன்னா இங்கிலாந்து எம்.பி. மைக்



ஹென்காக்கிடமிருந்து பல்வேறு தகவல்களைக் கறந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஹென்காக்கிடம் உதவியாளராகச் செயல்பட்டவர் அன்னா. இந்தச் சர்ச்சை குறித்து ஹென்காக் கூறுகையில், அன்னா ஒரு நிரபராதி என்றே நினைக்கிறேன். அவர் அப்பாவி என்றே நினைக்கிறேன். தவறான தகவலின் பேரில் அவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக கருதுகிறேன். அன்னா ஒரு ரஷ்ய உளவாளி என்று எனக்கு எந்தத் தகவலும் பொலிஸ் துறையிடமிருந்து வரவில்லை என்று கூறியுள்ளார் ஹென்காக்.

காத்யா ரஷ்யா உளவு நிறுவனத்திற்காக இரகசிய முகவராகச் செயல்பட்டு வந்ததாக இங்கிலாந்தின் உளவு நிறுவனமான எம்.ஐ.5 கூறியுள்ளது. சில மாதங்களுக்கு முன்புதான் அமெரிக்காவில் உளவு பார்த்ததாக ரஷ்ய அழகிககள் சிலர் பிடிபட்டது நினைவிருக்கலாம். தற்போது இங்கிலாந்திலும் அவர்கள் ஊடுருவியிருப்பது இங்கிலாந்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.


இதற்கிடையே இந்த விவகாரம் குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவரோவ் கூறுகையில்; அன்னா சாப்மேன் என்பவர் ரஷ்யாவுக்காக உளவு பார்த்ததாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இந்த அன்னா உண்மையிலேயே ரஷ்யர்தானா என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். உண்மையைக் கண்டறிய நாங்கள் முயற்சித்து வருகிறோம். அன்னா ரஷ்யராக இருந்தால் அவருக்குத் தேவையான அனைத்து தூதரக உதவிகளும் அளிக்கப்படும்.

இந்தச் சம்பவத்தால் இங்கிலாந்துடனான ரஷ்ய உறவுகளில் பாதிப்பு ஏற்படாது. இருப்பினும் இந்த உறவு ஏற்பட்டு விடாமல் தடுக்க சிலர் முனைகிறார்கள். ரஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நல்லுறவு ஏற்படும் வாய்ப்புகள் ஏற்படும்போதெல்லாம் அதைத் தடுக்க சிலர் முனைகின்றனர் என்றார்.

இதற்கிடையே இந்த விவகாரத்திற்கு தற்போது அரசியல் முலாம் பூசிப் பார்க்க ஆரம்பித்துள்ளனர். கடந்த வாரம்தான் 2018 ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியை நடத்தும் உரிமையைப் பெற்றது ரஷ்யா. இந்த உரிமை இங்கிலாந்துக்கே கிடைக்கும் என்று பெரும்பாலானோரும் நம்பியிருந்தனர். ஆனால், யாரும் எதிர்பாராத வகையில் ரஷ்யா அதைத் தட்டிச்சென்று விட்டது. இதனால் ரஷ்யா மீது பொறாமை கொண்டு அவதூறாக இப்படி ஒரு செய்தியை இங்கிலாந்து பரப்பி விடுவதாக ரஷ்யத் தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார மெயிலில் இவர்...



# ரிச்சர்ட் ஹோல் புரூக்

அமெரிக்காவின் சிரேஷ்ட இராஜதந்திரியான ரிச்சர்ட் ஹோல்புரூக் கடந்த 13 ஆம் திகதி இவ்வுலகைவிட்டு பிரிந்துள்ளார்.

ரிச்சர்ட் ஹோல்புரூக்கின் மறைவு அமெரிக்க மக்களை மட்டும் துயரத்தில் ஆழ்த்தவில்லை.பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் மக்களையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. காரணம் அந்நாட்டு மக்கள் மற்றும் அரசியல் வாதிகளுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்துள்ளார் ஹோல்புரூக்.

அதுமட்டுமல்லாமல் அமெரிக்க அரசியல் வரலாற்றில் நீண்டகாலமாக இராஜதந்திரியாக பணியாற்றியவர் என்ற பெருமைக்குரிய ஹோல்புரூக், ஏனைய நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் அரசியல் வாதிகளுடனும் நட்புறவைப் பேணி வந்துள்ளார்.

இவ்வாறான உலகப் பிரபலமுடைய ஹோல்புரூக் இதயத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மரணமடைந்துள்ளார்.

டன் ஹோல்புரூக்,ட்குடி கேர்ள் தம்பதிகளுக்கு 1941 ஏப்ரல் 24 ஆம் திகதி மகனாகப் பிறந்தவர்தான் ரிச்சர்ட் சார்ள்ஸ் அல்பேர்ட் ஹோல்புரூக்.

நியூயோர்க் நகரில் பிறந்த ஹோல்புரூக்கின் பெற்றோர்கள்,நாஸ்திகர்கள் ஆகும்.ஹோல்புரூக் 15 வயதை அடைந்திருந்தபோது அவரது தந்தை டாக்டர் ஹோல்புரூக் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்துள்ளார்.

ஸ்கார்டசாலே உயர் தரப்பாடசாலையைத் தொடர்ந்து பிரௌன் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்து பின்னர் பொது மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான வூட்றவ் வில்சன் பாடசாலையில் பட்டமேற்படிப்பை பூர்த்தி செய்தார்.

இந்நிலையில் அப்போதைய ஜனாதிபதி ஜோன் எப் கெனடியினால் அரச துறைக்குள் உள்வாங்கப்பட்டு வெளிவிவகாரச் சேவைக்குள் பணிநியமனம் வழங்கப்பட்டது.

முதத்தடவையாக வியட்நாமிலுள்ள அமெரிக்கத் தூதகரத்தில் ஹோல்புரூக் தனது பணியினை ஆரம்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு பதவி நிலைகளை அலங்கரித்த ஹோல்புரூக் 1976 இல் தேசிய பாதுகாப்பிற்கான பிரசார இணைப்பாளராக பணிபுரிந்தார்.

தொடர்ந்து வெளிநாட்டு தூதுவர்களுக்கான உதவியாளராகக் கடமையாற்றிய இவர், 1977 மார்ச் 31 ஆம் திகதி பசுபிக் மற்றும் கிழக்காசிய விவகாரங்களுக்கான 15 ஆவது உதவிச் செயலராக ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரால் நியமிக்கப்பட்டார்.

அன்று முதல் 1981 ஜனவரி 13 வரை அப்பதவியில் இருந்து வந்த ஹோல்புரூக்,பின்னர் வெளிவிவகாரச் செயலரின் ஆலோசகராகப் பணிபுரிந்தார்.

பின்னர் ஜனாதிபதி பில்கிளின்டனின் பதவிக் காலத்தில் 1994 செப்டெம்பர் 13 முதல் 1996 பெப்ரவரி 21 வரை ஐரோப்பிய மற்றும் கனடிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளராக பணியாற்றினார்.

இதேவேளை, 1993 முதல் 1994 வரை ஜேர்மனிக்கான அமெரிக்கத் தூதராகவும் 1999 முதல் 2001 வரை ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதுவராகவும் பணியாற்றி 2009 முதல் இறுதிவரை ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கான சிறப்புத்தூதுவராக பணியாற்றியுள்ளார்.

ஆப்கான் மற்றும் பாகிஸ்தானில் அமைதி நிலையை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கிலேயே அந்நாட்டுக்குரிய சிறப்புத் தூதராக ஒபாமாவால் நியமிக்கப்பட்டார்.

இறுதிவரை அதற்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஹோல்புரூக் மரணமடைந்தார்.


ஜனாதிபதி ஜோன் கெனடி முதல் ஒபாமாவரை அரசியலில் மிக முக்கியமானவராக நீண்டகாலம் பணிபுரிந்துள்ள ஹோல்புரூக்கின் வெற்றிடம் அமெரிக்க அரசால் நிரப்பமுடியாத வெற்றிடமாகியுள்ளது.


நீண்ட வரலாற்றைக் கொண்ட அமெரிக்க அரசியல்வாதியும் சிரேஷ்ட இராஜதந்திரியுமான ஹோல்புரூக்கின் அஸ்தமனம் அமெரிக்க அரசிற்கு பேரிழப்பாகும்.


யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சிரிக்க...
சிந்திக்க...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் ஏன் நீல நிறமாகத் தெரிகிறது?

ஏன்? எதற்கு? என்ற கேள்விகள் எழும் போது தான் மனித அறிவும் மூட நம்பிக்கைகள் பலவற்றிலிருந்து விடுபடும் பல அடிப்படை கேள்விகள் மனித மனங்களுக்குள் இருந்து வருவதே இல்லை. இவற்றில் ஒன்று தான் இது. ஏன் வானம் நீலம்?

சூரியனில் இருந்தோ அல்லது மின்குமிழில் இருந்தோ வரும் ஒளி வெள்ளை நிறமாக இருக்கும். ஆனால் பல நிறங்களை உள்ளடக்கியது. இதனை வானவில்லில் அவதானிக்கலாம் வாயுமண்டலத்தில் (ATMOSPHERE) கூடுதலான சதவிகிதம் [78% நைற்றஜன், 21% ஒக்சிஜன்] வாயுக்களும் மிகுதி நீராவியும் மாசுதுணிக்கைகளும் உண்டு. அவற்றினூடே ஒளி பூமியை வந்தடைகிறது.

ஒளி அலைகள் வேறுபட்ட அலை நீளத்தை உடையவை. சிவப்பு நிறம் கூடிய அலை நீளம் கொண்டது. நீல நிறம் குறைந்த அலைநீளம் உடையது.

கூடிய அலைநீளம் உடைய ஒளி அலைகள் வந்தடைகின்றன. குறுகிய அலைநீளம் உடைய நீல நிற ஒளி வாயுத் துணிக்கைகளால் உறிஞ்சப்படுகிறது. உறிஞ்சிய துணிக்கைகள் அதை கதிர்க்கின்றன. அவை தெறிப்பு அடைந்து நீல நிறமாக வானம் தோன்றுகிறது. ஒளி காற்று மண்டலத்தில் இடையூறில்லாமல் பயணம் செய்தாலும் காற்றிலுள்ள அணு மூலக் கூறுகள் நீர்த்துளிகள் பனிமூட்டம் போன்றவை ஒளியைச் சிதறடிக்கின்றன. சிதறிய ஒளி மேலும் மேலும் சிதறடிக்கப்படுகிறது. இவ்வாறு நடைபெறும் போது மிக அதிகத்துடிப்புடைய நீல நிறம் மிக அதிகமாக சிதறடிக்கப்படுகிறது. [சிவப்பு மிகக்குறைவாக சிதறுகிறது]

நாம் பார்க்கும் போது அவ் ஒளி அலைகள் கண்ணை வந்தடைகின்றன. அதனாலேயே பகலில் வானம் நீல நிறமாக இருப்போது போலத் தோன்றுகிறது. வானம் என்பது வெறுமனே வாயுத்துணிக்கைகள், மாசுகளால் மேலே கூறப்பட்ட ஒளி ஆல் ஆனதே தவிர அப்படி ஒன்று இல்லை என்பதே உண்மை.

பௌதீக விதிப்படி ஒரு நிறத்தின் ஒளி அலைகளின் நீளம் அதிகமா இருந்தா அவை நம் பார்வைக்குக் கிடைக்காமலே போய்விடும். நீல நிறத்தின் ஒளி அலைகள் குறைவாக இருப்பதால் அது நம் கண்களுக்குள் மாட்டிக்கொள்கிறது.

வானம் நீல நிறமாக இருப்பதால் அதைப் பிரதிபலிக்கும் கடலும் நீல நிறமாகவே இருக்கிறது.

காலை மாலை சூரிய உதயம் அஸ்தமனம் போது மட்டும் அந்தப் பகுதி சிவப்பாக தெரியக்காரணம் சூரியக் கதிர்களில் உள்ள சிவப்பு நிறத்தின் ஒளியலைகளின் நீளம் அப்போ மட்டும் குறைவதுதானாம்! பூமியின் மேலுள்ள காற்று மண்டலம் தான் காரணம். சூரிய ஒளி அனைத்து வண்ணங்களையும் உள்ளடக்கியது. வானவில்லில் அது தன் தோகையை விரித்து ஏழு வர்ணங்களைக் காட்டுகிறதே அதனுள் மற்ற வர்ணங்களும் அடக்கம். அவை அனைத்தும் ஒளியே ஆயினும் வர்ண வேறுபாடுகளுக்கு காரணம் அந்த ஒளியின் அலைநீளம் மற்றும் துடிப்பு வானவில்லின் வண்ணங்களில் நீல நிறம் மிக அதிகத் துடிப்புடனும் சிவப்பு மிகக் குறைந்த துடிப்புடனும் இருப்பவை.

நாம் 'பார்ப்பது' என்பது ஒளி நமது கண்ணில் வந்து படும்பாது மட்டுமே. பார்க்கும் பொருட்கள் எல்லாமே அதில் பட்டு திரும்பும் ஒளி நமது கண்ணை வந்தடைவதால் தான் காற்று மண்டலத்தில் பலமாக சிதறடிக்கப்படும் நீல நிறமே மற்ற நிறங்களை விட பெருமளவில் நமது கண்ணில் வந்து விழுகிறது. ஆகவே தான் வானம் நீல நிறம்.

இரவில் நிலவின் ஒளி நட்சத்திரங்களின் ஒளி ஆகியவை பலம் குறைந்த ஒளியாக இருப்பதால் அந்த சிதறல்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

## நஞ்சை உருவாக்கும் தாவரங்கள்

'ஹைற்ரஜன் சயனைடு' என்பது ஒரு கொடிய நஞ்சாகும். பல தாவரங்கள் அந்த விஷத்தைப் பயன்படுத்தி தம்மைத் தின்ன வரும் பூச்சிகளை விரட்டிவிடுவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அந்தத் தாவரங்களைப் பூச்சிகள் கடிக்கிற போது செல்கள் சேதப்படுத்தப்படுகின்றன. அப்போது அத்தாவரங்கள், 'சயனோ குளுக் கோசைடுகள்' என்ற சேர்மங்களில் இருந்து சயனைடை உண்டாக்கி வெளிப்படுத்துகின்றன. இந்தச் செயன்முறையில் தேவையானபோது மட்டும் சரியான தருணத்தில் நஞ்சு வெளியிடப்படுகிறது.



இப்படி சுமார் ஆயிரம் வகையான தாவரங்கள் சயனைடு விஷத்தை வெளியிடுகின்றன. 'காசாவா' என்ற தாவரத்தில் சயனைடு விஷம் அதிகம். அதை உபயோகிப்பது ஆபத்தான விடயம்.

யாரோ, பெரிய நாப்விட், வெள்ளை கிளாவர், பறவைக் கால் டிரபாயில் போன்ற தாவரங்கள் சயனைடை உற்பத்தி செய்வதில் குறிப்பிடத்தக்கவை. பறவைக் கால் டிரபாயில், எப்படி நத்தைகளிடம் இருந்து தன்னைத் தற்காத்துக்கொள்கிறது என்று கண்டுபிடிக்க முயற்சித்து வருகிறார்கள்.

தாவரவியல் மற்றும் மரபியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஜோன்ஸ், டாக்டர் ஸ்டீபன் காம்டன் ஆகிய இரு ஆய்வாளர்கள் பூச்சிகளுக்கு சயனைடு இலைகளைத் தின்னக் கொடுத்துப் பரிசோதித்தார்கள். அதேபோல இருவகையான தாவரங்களின் பூவிதழ்களையும் தின்னக் கொடுத்தார்கள்.

சிலவகை வண்டுகள், நீல வண்ணத்துப் பூச்சியின் லார்வா புழு, ரம்ப ஈ போன்றவை சயனைடை பற்றி கவலைப்படாமல் அத்தகைய இலைகளைச் சாப்பிட்டு விடுகின்றன. சயனைடை தீங்கற்ற பொருளாக மாற்றிவிடக்கூடிய திறமை அவற்றுக்கு இருப்பதாகத் தோன்றுகிறது.

மூன்று வகை வெட்டுக்கிளிகள், இரண்டு வகை வண்டுகள், இயர்விங் என்ற பூச்சி, இரண்டு வகை நத்தைகள் ஆகியவை சில குறிப்பிட்ட தாவரங்களை மட்டும் தேர்ந்தெடுத்து உண்கின்றன. அவை பறவைக் கால் டிரபாயிலை ஒதுக்கி விடுகின்றன.

சயனைடு அதிக அளவில் இருக்கும்போது கொடிய நஞ்சு. ஆனால் டிரபாயில் செடி, தன்னைத் தின்ன வரும் பூச்சிகளைக் கொல்ல முனைவதில்லை. ஒரு எச்சரிக்கை கொடுத்து விரட்டிவிடவே சயனைடை அது பயன்படுத்துகிறது.

வெட்டுக்கிளி ஒன்று ஒரு பூவில் போய் உட்கார்ந்த போது நடந்ததை ஆய்வாளர்கள் விபரிக்கிறார்கள். அது தனது மீசைகளாலும் உணர்கொம்புகளாலும் பூவைப் பரிசீலித்துவிட்டு, சரி சாப்பிடலாமென்று ஒரு கடி கடித்தது. அப்போதுதான் பூவில் சயனைடு இருப்பதை அது உணர்ந்தது. உடனே சட்டென்று பின்வாங்கி தலையை ஆட்டியவாறு பூவை விட்டுப் போய்விட்டது.




## டைட்டானிக் கப்பல் சிதைவுகளை வேகமாக அழிக்கும் புதுவகை வைரஸ்

1912ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி இங்கிலாந்தில் இருந்து புறப்பட்டு நியூயோர்க் நோக்கிச் சென்று கொண்டிருந்த டைட்டானிக் கப்பல், அட்லாண்டிக் கடலில் பனிப்பாறையில் மோதி 2223 பயணிகளுடன் விபத்தில் சிக்கியது. இதில் 706 பயணிகள் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். மற்ற அனைவரும் இறந்தனர். பெரும் சோகத்தை ஏற்படுத்திய இந்த நிகழ்வை 98 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதன் சிதைந்து போன எஞ்சிய பாகங்களின் மூலம் நினைவு கூர்ந்து வருகிறார்கள்.

இவை அட்லாண்டிக் கடல் பகுதியில் காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் டைட்டானிக் கப்பலின் பாகங்கள் வேகமாக அழிந்து வருவது தெரியவந்துள்ளது. அதில் இருந்து சேகரிக்கப்பட்ட நுண்ணுயிரியின் டி.என்.ஏ. பரிசோதிக்கப்பட்டது. அப்போது ஒரேஞ் நிறத்தில் உள்ள புதிய வகை பக்றீரியா இரும்பை வேகமாக அழித்து வருவது தெரிந்தது. இதனால் மிகவிரைவில் டைட்டானிக்கின் சிதைந்த பாகங்கள் முற்றிலும் அழிந்து தடயமின்றி போய்விடும் என்று கவலை தெரிவித்துள்ளனர் ஆராய்ச்சியாளர்கள்.

[illegible] ஹாலிபாக்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் கனடாவில் உள்ள நோவா ஸ்காட்டியா பல்கலைக்கழகம், ஸ்பெயின் செவிலா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு இணைந்து ஹென்ரீடா மான், பவ்லீன் கோர் ஆகியோர் தலைமையில் ஆராய்ச்சியை மேற்கொண்டனர். அதில் கப்பலின் துருவை பொடியாக்கி அழித்து வரும் பக்றீரியா முற்றிலும் புதிய வகை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுபற்றி விஞ்ஞானிகள் கூறியதாவது:

இரும்பு துருப்பிடித்து மண்ணுடன் கலப்பதுதான் இயற்கை நியதி. இது கண்ணுக்கு புலப்படாத நுண்ணுயிர்களான பக்றீரியாக்கள் மூலம் சாத்தியமாகிறது. இது மிகவும் மெதுவாகவே நடைபெறும். ஆனால், புது வகை பக்றீரியா டைட்டானிக் கப்பல் பாகங்களை வேகமாக அழித்து வருகிறது.

அந்த புது பக்றீரியா இரும்பை சிதைப்பதில் அதிக சக்தி வாய்ந்தது என்பது ஆய்வில் உறுதியாக உள்ளது. இரும்பை அழிக்கும் பக்றீரியாக்கள் ஏராளமாக உள்ளன. இருப்பினும் புதிய பக்றீரியா அதிவேகமாக செயற்படுகிறது. அதிகபட்சமாக இன்னும் 15 முதல் 20 ஆண்டுகள் வரை மட்டுமே இதன் சிதைந்த பாகங்கள் இருக்கும் என்று கவலையோடு சொல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# ஆறுதலாய் ஒரு வார்த்தை

ராமசாமி சோபாவில் களைப்பாய் உடலை கிடத்தி இருந்தார்.அடுக்களையில் மீனாட்சி கத்திக் கொண்டிருந்தாள்.

உங்களுக்கென்று அரசாங்கம் என்ன வேலை தந்திருக்கிறதோ அதை மட்டும் பாருங்கள்!உங்கள் சேவையை எல்லாம் ஆஸ்பத்திரியோடு நிறுத்திக்கோங்க! அத வுட்டுட்டு தெருவுல யாருக்காவது உடம்பு சரியில்லைன்னா மணிக்கணக்கா அங்க உட்கார்ந்து கதை பேசுறதை விட்டுத் தொலைங்க.வீட்டுக்காரியம் ஒண்ணு பார்க்கிறதில்ல எனக்கென்னன்று நானும் இருந்திட்டா வீடு வீடா இருக்காது...என்றபடி வார்த்தைகளை கொட்டி ராமசாமியை தாளித்துக் கொண்டிருந்தாள்.

ராமசாமிக்கு நாற்பது வயது.சிறு வயது முதலே பிரச்சினைகளோடு போராடி கஷ்டப்பட்டு படித்து அரசாங்க வேலையிலும் அமர்ந்துவிட்டார்.அவருக்கு உன்னதமான பணி.காசநோய் பிரிவில் மருந்தாளராக.ஆனால், அவர் மருந்தாளனாக மட்டுமல்ல சேவை மனதுள்ளவராகவும் பணியாற்ற ஆரம்பித்தார். நுரையீரலோ அல்லது உடலின் மற்ற பகுதிகளோ காசநோய் கிருமிகளால் பாதிக்கப்பட்டு எடையிழந்து களையிழந்து மரணத்தின் விளிம்பை தொட்டு வருபவர்களுக்கு மருந்து மாத்திரைகளை வழங்குவதோடு மனதுக்கு உகந்த ஆறுதல் வார்த்தைகளையும் வழங்குவார்.

சில சமயங்களில் நோயாளிகளின் தோள் மேல் கைபோட்டுக் கொண்டு ஜாலியாக பேசிக் கொண்டு நடைபயிற்சி சென்று வருவார். அவர்களது சிகிச்சை முடியும் வரை தனது தீவிர கண்காணிப்பில் வைத்துக் கொள்வார். மருந்து மாத்திரைகளை வாங்க வருபவர்களை விட அவருடன் ஒரு அரைமணி நேரம் பேசி மனதை திடப்படுத்திக் கொள்ளும் நோயாளிகள் தான் அதிகம்.

மீனாட்சிக்கு இவையெல்லாம் தெரிய வந்த போது காசநோயாளர்களுடன் கைகோர்த்துக் கொண்டு நடக்கிறீராமே...முகத்தைச் சுளித்தாள்.

வெளியில் இருந்து வந்தீர் என்றாள் குளித்து உடைமாத்தி வாரும்! என்றாள் அடுத்து வந்த நாட்களில்.

வீட்டுக்கு உறவினர்கள் வந்தாலோ இதையெல்லாம் சொல்லி ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள்.

மீனாட்சியை எதிர்த்துப்பேசவும் முடியாமல் தனது பணியை ஆத்ம திருப்தியுடன் செய்யவும் முடியாமல் தவித்தார் ராமசாமி.

'ஆண்டவா' என்று அடிக்கடி பெருமூச்செறிந்தார்.

அன்று ராமசாமி வீட்டுக்குள் நுழையும் போது மீனாட்சி ஹாலில் சுருண்டு கொண்டு படுத்திருந்தாள்.

உடம்புக்கு என்ன?என்று கேட்டபோது காய்ச்சலும் வாந்தியுமாய் இருக்கிறது என்று வந்தது பதில்.

மருத்துவரிடம் அழைத்துச் சென்று காண்பித்தபோது பல்வேறு சோதனைகளுக்குப் பிறகு மஞ்சள் காமாலை என்று முடிவு சொன்னார்.

மருந்து மாத்திரைகளோடு உணவு பத்தியமும் ஓய்வும் மிகமிக அவசியம்.இல்லையேல் உயிருக்கு ஆபத்து என்று உறுதியாய் சொன்னார்.

மீனாட்சி மிகவும் சோர்ந்து விட்டிருந்தாள்.ஆட்டோ பிடித்து வீட்டிற்கு அழைத்து வந்து நீ பேசாமல் படு மீனாட்சி! நான் மற்ற வேலைகளை எல்லாம் பார்த்துக் கொள்கிறேன் என்று அவளுக்கு வேண்டியதை செய்துகொடுத்து விட்டு ஒரு மணி நேரத்தில் பம்பரமாய் சுழன்று வீட்டு வேலைகள் அத்தனையையும் முடித்தார்.

கரிசனையோடு மீனாட்சி அருகில் அமர்ந்து அவளதுகையை எடுத்து தன் உள்ளங்கைகளுக்கு இடையில் வைத்து மெதுவாக தடவி விட்டபடி ஒண்ணும் கவலைப்படாதே மீனாட்சி ஒரு பத்து நாள் தான்.அதுக்குள்ள உனக்கு நல்லா சுகமாயிடும்.நாம இரண்டு பேரும் சேர்ந்து நம்ம புள்ள வீட்டுக்கு போய் ஒரு மாதம் இருந்துட்டு வருவோம்.உனக்கு ஒரு மாறுதலாய் இருக்கும்.நானும் லீவு போட்டு வாரேன் என்று அவர்பேசிக்கொண்டிருக்கையில் மீனாட்சி இடைமறித்து தழுதழுத்த குரலில் சொன்னாள்.

எனக்கு மருந்து மாத்திரைகளை விட உங்கள் ஆறுதல் வார்த்தைகளிலும் அன்பான கவனிப்பிலுமே பாதி நோய் குணமாய்டுங்க!மனசு இப்பதான் தெம்பா இருக்கு? என்று அழுதவளை அர்த்தமுள்ள கண்களோடு நோக்கினார்.

மீனாட்சி பரிபூரணமாய் சுகம் பெற்று மறுபடியும் வீட்டு வேலைகளை எல்லாம் செய்யும் அளவிற்கு திடம் பெற்று விட்டாள்.மனதளவிலும் மாற்றம் பெற்றுவிட்டாள்.

இப்போதெல்லாம் ராமசாமி காசநோயாளர்களிடம் பேசும் வார்த்தைகளை மீனாட்சியிடம் பகிர்ந்து கொள்கிறார். மீனாட்சியும் ஆவலாய் கேட்டுக்கொள்கிறாள்.



நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இப்படியும் சில காதல்

விலையுயர்ந்த பொம்மைக்கு
கைகாட்டும் ஏழைச் சிறுவனாய்
என் மனம் கைகாட்டுகிறது
உன் இதயத்தை நோக்கி
மலையின் தலையில் இருக்கும்
நிலவாய்தான் தெரிந்தாய் நீ
எனக்கு
மலையேறிய பின்னும் நீ
எங்கோ!

நீ என்ன
பல வல்லரசுகள் இணைந்து
காவல் காக்கும்
கடற் பிராந்தியமா
என் காதல் படகு அதில்
பயணிக்க பயப்படுகிறதே
சமிஞ்ஞை செய்யக் கூட
சங்கப் படுகிறதே

நீ தூரத்தே
அலையாய் அழகாய்
தெரிகிறாய்
உன் தூர ஈரமாவது
கிடைக்குமென்று நிற்கையில்
என் கால்கள் பயத்தால்
பின் நோக்கி நகர்கின்றது
நீரில் மிதக்கும்
பந்தாய் இருக்கிறது
என் மனம் உன்
அடி மனதை தொட வழி எது
என்று
தெரியாமல் தவிக்கிறது

**பா.ரிசாந்தன்,**
**ஹொப்டன்.**

# உன்னில் செதுக்கு

நிறைவான வாழ்க்கைக்கு நேரம் ஒதுக்கு
நேசத்தின் சிந்தனையை நெச்சில் செதுக்கு
நிகழ்கால கடமைகளை நொடிக்குள் அடக்கு
எதிர்கால கடமைதனை இன்றே தொடக்கு
இன்றில் நீ இனிதாக வாழப்பழகு-இனி
நாளையும் உனதாக்கி ஆளப்பழகு
எதைத்தான் கண்டாய் இதுவரை அழுது
இருப்பதைக் கொண்டெழு இறைவனைத் தொழுது
துணிந்துவிடு எதிலும் தொடர்ந்து செயல்படு
விடிந்து விடும் உலகமும் உன்னோடு

**ஆர்.ஜே.பிரகலாதன், உடுவில்.**




# பணமும்... மலையக மங்கையும்

வாழ்க்கைச் சுமை
தீர்க்க வந்த எனக்கு
வாழ்கையே சுமையாச்சு...

வறுமை போக்க வந்த
எனக்கு
வருத்தமே துணையாச்சு...

குடும்ப சுமை தீர்க்க
வந்த நான்
குடும்பத்துக்கே
சுமையாகியாச்சு...

பிறர் வையிறு
நிறம்ப வந்த
என் வயிரையே
நிறப்பியாச்சு...

குமரியாக வந்த
நான்-குழந்தைக்கு
தாயாகிப் போகிறேன்!

மலயகத்தில் இருந்து
வந்த நான்...
மசங்கியே போகிறேன்.

ஊருக்கு தெரியாமல்
வந்த நான்...
ஊரரிய போகிறேன்.

உத்தமியாய் வந்த நான்
ஊர் மானத்தை வாங்கியவளாய்
போகிறேன்...

பணத்தை நம்பி
வந்த நான்
பணத்தாலே பதம்
பார்க்கப்பட்டு போகிறேன்

பணத்தை தேடி.
படி தாண்டி வந்தேன்
உயிரை தவிர...
மற்றெல்லா வற்றையும்
இழந்து போகிறேன்
நடை பிணமாகி

இத்தனை நடந்து
என்னை மௌனமாக்கியது
'மலையக மங்கை' என்ற
மகுடமும்...!

அன்னை அசுரனாக
ஆண்டவன்...
அரசவையில் அங்கம்
வைப்பதுவுமே!

**கே.எம்.சம்ஸ் மொஹமத்,**
**பரகடுவை.**

# வாசமலரே பாசம் நீ தா...

வாசம் வீசும் பூவே
நேசம் நீ தருவாயோ...?
வேசம் மிக உலகில்
என்னில்
பாசம் வைக்க...

பத்துப் பௌர்ணமி
ஈன்றெடுத்தவளுமில்லை
பரம்பரை விந்திட்ட
பாதுகாவலனுமில்லை...

வாழ்வா...சாவா...
நிலையிலா நெஞ்சில்
உறுதிகொள...

வாசம் வீசும் மலரே...
பாசம் வீசி பூப்பாயோ...??

**யாழ்.அஞ்சனா,**
**கல்லுவம், கரவெட்டி.**

# என் அம்மாவுக்கு...

முதலாம் திங்கள்
உன் வயிற்றில்
அணுவாக
அவதரித்து
இரண்டாம் திங்கள்
கருவாக உருவாகி
மூன்றாம் திங்கள்
நிரந்தரமாய்
முத்திரை பதித்து
நான்காம் திங்கள்
தொப்புள்
கொடியில்
உறவினை
தொடர்ந்து
ஐந்தாம் திங்கள்
உன் உணவை
நானும் உண்டு
ஆறாம் திங்கள்
உன் சுவாசத்தை
நானும் சுவாசித்து
ஏழாம் திங்கள்
உன் வயிற்றில்
செல்லமாய்
உதைத்து
எட்டாம் திங்கள்
நீபேசும்
மொழிகளை
நான் கேட்டு
ஒன்பதாம் திங்கள்
பூவுலகை தரிசிக்க
எண்ணி
பத்தாம் திங்கள்
உன்னை துடிக்க
வைத்து
பூவுலகை
பார்த்தேன் தாயே!
என்றாலும்
இன்னும் என்
வலிகளை நீ
தாங்குவது உன்
அன்பை
உணர்த்துகின்றது

**ஸிந்துஜா விமல்,**
**கோப்பாய் வடக்கு.**

# அவன் கரங்கள் சுதந்திரமுடையது

அதோ! என் கவிதைகளை
சூரையாடியவன் வருகி
றான்
அவன் கரங்கள்
(சு)தந்திரமுடையது...
நலையானவன் ஆனால்,
எவர் விழிகளுக்கும்
புலப்படுவது இல்லை.
'அவன் அதிகாரத்தையே
ஆடையாகக்
கொண்டவன்...'
அவனதிகம் ஏழைக்கவி
தைகளிலே
தனது கிறுக்கல்
(வி)சித்திரங்களை
வரைவதுண்டு
அவனது இரசனைக்குறிய
சாகச அங்கம்
இன்னொருவனை
ஈன்றுள்ளது
'இவன் பச்சோந்திகளின்
செய்கைக்கு
நிகரானவன்...'

அவனும், அவனீன்ற
இவனும்,
நாமீன்ற பிள்ளைகள் தான்
இருவரும் மைபூசிட்ட
எமது
பெருவிரல் ரேகையால்
வெளிச்சம் பெறுவர்
மந்திரி,தலைவன்
அரசனென்ற
பட்டபெயர்களுடன்,
அறிந்தும் அறியாமலும்
எமது கரங்கள்
சுதந்திரமுடையது
ஆகையால்,
உருவாக்கப்பட்டவனே!
உருவாக்கியவனின்
ஊதியத்தை
சுரண்டுகிறான்
எனவே!
அகிலமெங்கும் அதிர்ந்து
ஒலிக்கட்டும்
என் தேசத்து மானுடத்தின்
பேரவலம்.

**பி.திமோதிஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை பேசிய நடிகை

விபசாரத்தில் ஈடுபட்ட பிரபல நடிகை அண்மையில் கைது செய்யப்பட்டார். அவர் எவ்வாறு கைதுசெய்யப்பட்டார் என்ற தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன.

ஹைதராபாத் குந்தன்பாக்கில் உள்ள ஒரு ஆடம்பர சொகுசு பங்களாவில் பிரபல நடிகை சைராபானு வசித்து வருகிறார். அன்று மாலை சைராபானு தனது சொகுசு பங்களாவில் ஓய்வாக இருக்கும்போது சுமார் 45 வயது மதிக்கத்தக்க சுதர்சன் ரெட்டி என்பவர் தன்னை ஜீசன்பாய் அனுப்பிவைத்ததாகக் கூறிக் கொண்டு உள்ளே நுழைந்தார். கவர்ச்சிகரமான உடையில் இருந்த சைராபானு ரெட்டியை கைகுலுக்கி வரவேற்றார்.

'நான் உங்கள் படங்கள் அனைத்தும் பார்த்திருக்கிறேன். உங்களின் பரம ரசிகன்' என்றார் ரெட்டி உள்ளங்கையைச் சொரிந்து கொண்டே. ரெட்டி உங்களுக்கென கையில் அரிப்பா? என்றார் சைரா கண்ணைச் சிமிட்டிக்கொண்டே. ரெட்டியும் அந்தக் குறும்பை ரசித்தவராய் அரிப்பு ஒன்றுமில்லை. உங்களை நேரில் பார்த்ததும் கொஞ்சம் நடுக்கமாக இருக்கிறது. இருந்தாலும் என்னை ஒரு பெண் வந்து தொட்டால் என் உடம்பு கொதிக்கிற உலைபோல் பயங்கரமாக சூடாகிவிடும் என்றார்.

பதிலுக்கு நான் உங்களைச் சூடேற்றிப் பார்க்கட்டுமா? என்றிருக்கிறார் சைராபானு. சொர்க்கவாசலான உங்கள் படுக்கையறை எங்கே? என்றார் ரெட்டி கண்களில் ஆர்வம் பொங்க. அதற்கு நீங்கள் ரிக்கெற் எடுக்க வேண்டுமே! என்றார் சைரா. இதோ 20 ஆயிரம் ரூபா என்று நூறு ரூபாக் கட்டுகள் இரண்டை எடுத்து மேசை மீது வைத்தார் ரெட்டி. எனது தொழிலுக்கு முற்பணம் வாங்கும் பழக்கமே எனக்குக் கிடையாது! முழுப்பணமும் வாங்கிவிடுவேன்! எனது விலை ஒரு இலட்சம் ரூபா என்பதை ஜீசன்பாய் சொல்லவில்லையா? மீதி 80 ஆயிரம் ரூபாவும் மேசையில் வைத்தால்தான் என் படுக்கை அறை கதவு திறக்கும்! என்றார் சைரா.

ஒரு இலட்சம் ரூபா கொடுக்காமல் சைராவை நெருங்க முடியாது என்று தெரிந்துகொண்ட ரெட்டி தனது 20 ஆயிரம் ரூபாவைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று நினைத்து நான் என் பணத்தை எடுத்துக் கொள்கிறேன் என்று மேசையில் கைவைத்தபோது பணத்தைத் தொடாதே! அது என் பணம்! என்றார் சைராபானு. உள்ளே வந்ததில் இருந்து என் உடலின் அங்கங்களை நீ பார்த்து இரசித்துள்ளாய்! அதற்கு நீ பணம் கொடுக்க வேண்டும் இல்லையா? நீயாக வெளியே போகிறாயா? அல்லது எனது பாதுகாவலர்களை விட்டு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவா? என்றாராம் சைரா. ஒரு விநாடி கூடத் தாமதிக்காமல் அங்கிருந்து வெளியேறினார் ரெட்டி.

அன்றிரவு 11 மணிக்கு ரெட்டி தனக்கு ஏற்பட்ட சோகத்தை ஒரு பிரபலமான நட்சத்திரக் ஹோட்டலில் இருந்த ஜீசன்பாயிடம் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தார். அதை அருகில் சாதாரண உடையில் இருந்த பொலிஸ் ஆணையரின் உளவாளியான ஒருவர் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தார். சைராபானு துணை நடிகை ஜோதியுடன் சேர்ந்து பயமின்றி பாலியல் வியாபாரம் செய்வதையும் அவர்களது செக்ஸ் வாடிக்கையாளர்களுக்குப் பெண்களை வழங்கி வருவதையும் குறிப்பெடுத்த அந்தப் பொலிஸ்காரர் மறுநாள் ஹைதராபாத் பொலிஸ் ஆணையர் ஏ.கே.கானிடம் விலாவாரியாக ஒப்புவித்தார்.

ஆணையர் சைராவைப் பற்றி பன்டாகத்தா பொலிஸ் நிலைய ஆய்வாளர் அசோக் சக்கரவர்த்திக்கு உத்தரவிட்டார். அவர் பல விதங்களில் ஆய்வு செய்தபோது இணையத்தளத்தில் சென்னை, பெங்களூர் மற்றும் விசாகபட்டினம் போன்ற நகரங்களில் சைராபானு மற்றும் ஜோதியின் ஆபாச நீலப்படங்கள் பளிச்சிடுவதைக் கண்டார்.

அவற்றின் கீழ் இருந்த அவர்களின் மொபைல் நம்பர் மற்றும் ஈமெயில் அடையாளங்களைக் குறித்துக் கொண்டார். அந்த எண்களில் தொடர்பு கொண்டு தான் சைராபானு மற்றும் வெளிநாட்டுப் பெண்ணுடனும் படுக்கையறை இன்பம் அனுபவிக்க விரும்புவதாக அசோக் சக்ரவர்த்தி தெரிவித்தபோது ஒவ்வொரு பெண்ணுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் வைப்புச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி செய்ததும் நடிகை சைராபானுவையும் வெளிநாட்டுப் பெண் சாராவையும் அவருக்காக 'புக்' பண்ணியிருப்பதாகத் தகவல் வந்தது!

2010 ஆகஸ்ட் 23 இல் அசோக் சக்ரவர்த்தியின் மொபைல்போனில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குரூப் செக்ஸ் விருந்திற்கு ஏற்பாடு பண்ணியுள்ளதாகவும் இரவு 7 மணிக்கு வரவேண்டும் என்றும் அங்கு நடிகை சைராவும் சாராவும் அவருக்கு செக்ஸ் விருந்து வழங்கக் காத்திருப்பதாகவும் ஒரு பெண் தகவல் தெரிவித்தாள். அந்த முகவரி சைராபானுவின் சொகுசு பங்களாதான் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட அசோக் சக்ரவர்த்தி, பொலிஸ் ஆணையர் ஏ.கே.கானுக்கு உடனடியாகத் தகவல் தெரிவித்தார். ஆணையர் உத்தரவுப்படி அன்று மாலை 5 மணிக்கு ஆய்வாளர் அசோக் சக்ரவர்த்தியின் தனிப்படை சாதாரண உடையில் நின்று சைராபானுவின் சொகுசு ப்ங்களாவைக் கண்காணித்தது. அந்தக் கட்டிடத்திற்கு ஏராளமான கார்கள் வந்து கொண்டிருந்தன. அசோக் சக்ரவர்த்தி அழகான இரண்டு பொலிஸ் இளைஞர்களை சாதாரண உடையில் தனக்குக் கிடைத்த இரண்டு டோக்கனைக் கொடுத்து உள்ளே அனுப்பினார்.

சைராபானுவின் வீட்டினுள் ஆங்காங்கே ஜோடி ஜோடியாக ஆண்களும் பெண்களும் பாலுணர்ச்சியைத் தூண்டும் வகையில் செக்ஸ் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பொலிஸ்காரர்கள் இருவரையும் செக்ஸுக்கு அழைத்தபோது இருவரில் ஒருவர் தனது மொபைலின் பச்சை பட்டனை அமுக்கி இன்ஸ்பெக்டர் அசோக் சக்கரவர்த்திக்கு சிக்னல் கொடுத்தார். உடனே சாதாரண உடையில் இருந்த தனிப்படை சைராவின் வீட்டினுள் நுழைந்து சோதனை செய்தது. உள்ளே குரூப் செக்ஸில் ஈடுபட்டிருந்த 15 பேர், குரூப்செக்ஸ் விருந்தளித்த நடிகை சைராபானு, ஜோதி மற்றும் வெளிநாட்டுப் பெண்கள் 10 பேரையும கைதுசெய்தது. இந்தச் சம்பவம் தென்னிந்திய திரையுலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு வாய்ப்பு?





இந்திய, தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் தோனி தலைமையிலான இந்திய அணி சாதித்துக்காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், ஒரு ருவென்ரி-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகளிடையிலான முதல் டெஸ்ட் செஞ்சூரியன் சுப்ப ஸ்போர்ட் ஸ்பார்க் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

சர்வதேச டெஸ்ட் தரவரிசையில் முதலிரு இடங்களில் உள்ள இந்தியா(129), தென்னாபிரிக்க(116) அணிகள் மோதும் தொடர் என்பதால் இத்தொடர் உலகளவில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தவிர தொடர் தொடங்கும் முன்பே இந்திய, தென்னாபிரிக்க அணிகளின் பயிற்சியாளர்கள் ஹேஸ்டன்-வான் ஜில் இடையிலான வார்த்தைப் போர் அதிக எதிர்பார்ப்பை கிளப்பியுள்ளது.

**எகிறும் ஆடுகளம்:**

இந்திய அணியை பொறுத்தவரை தென்னாபிரிக்க மண்ணில் விளையாடிய 12 டெஸ்டில் 5 இல் தோற்று ஒன்றில் மட்டுமே(2006 ஜொகனஸ் பேர்க்) வென்றுள்ளது. 6 போட்டி டிரா ஆனது. அதிகமாக எகிறும் (பவுன்ஸ்) ஆடுகளங்கள் உள்ள தென்னாபிரிக்காவில் ஒரு பயிற்சி போட்டியில் கூட பங்கேற்காமல் நேரடியாக இந்திய அணி களமிறங்கியுள்ளது.

**துடுப்பாட்டம் பலம்:**

துடுப்பாட்டத்தில் வழக்கம் போல அதிரடி வீரர் சேவாக்குடன் சமீபத்தில் போர்மிற்க திரும்பிய கம்பீர் இணைந்து நல்ல தொடக்கம் கொடுப்பர். நடுவரிசையில் டிராவிட், சச்சின், லட்சுமண், ரெய்னா ஆகியோர் தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும். சமீப காலமாக ஏமாற்றும் தோனி, உலகக் கிண்ணத்தொடருக்கு முன்பாக ஓட்டம் குவிக்கும் வழியை கண்டுகொண்டால் நல்லது.

**பந்து வீச்சு கவலை:**

சகிர்கான் காயம் இன்னும் சரியாகாத நிலையில் ஸ்ரீசாந்தும் கணுக்காலில் காயமடைந்திருப்பது இந்திய அணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. சுழற்பந்து வீச்சை வழக்கம் போல ஹர்பஜன்சிங் கவனித்துக் கொள்ளலாம். இவருடன் தேவைப்பட்டால் பிரக்யான் ஓஜா இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தோனி தயார்:**

போட்டி குறித்து இந்திய அணிக்கப்டன் தோனி கூறுகையில்;

ஏற்கனவே இங்குள்ள ஆடுகளங்களில் ஐ.பி.எல். மற்றும் சாம்பியன்ஸ் லீக் தொடரில் வீரர்கள் விளையாடியுள்ளனர். இதனால் எங்கள் வீரர்களுக்கு இந்த மைதானங்கள் புதிதல்ல. இதற்கு முன் இங்கு என்ன நடந்தது என்பது பற்றி கவலையில்லை. இந்த தொடருக்காக சிறப்பான முறையில் தயாராகி உள்ளோம் என்றார்.

**அம்லா நம்பிக்கை:**

தென்னாபிரிக்க அணியில் துடுப்பாட்டத்தின் முதுகெலும்பாக இருப்பவர் ஹாசிம் அம்லா. கடந்த முறை இந்தியா வந்த போதும் சரி சமீபத்திய பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலும் சரி பல சதங்களை அடித்து மிரட்டினார். இவர் மீண்டும் சவாலாக இருப்பார் எனத் தெரிகிறது. இவருடன் கப்டன் ஸ்மித் கலிஸ், டிவிலியர்ஸ் போன்றவர்களை அவர்களது களத்தில் வீழ்த்துவது என்பது எளிதான காரியம் அல்ல.

**மிரட்டும் கூட்டணி:**

வேகப்பந்து வீச்சு தான் தென்னாபிரிக்க அணிக்கு மிகப் பெரும் பலமாக உள்ளது. வேகத்துக்கு சாதகமாக ஆடுகளம் தயாரிக்கப்பட்டுள்ள. நிலையில் ஸ்டைன் மற்றும் ஆல்பி மோர்கல் கூட்டணி இந்திய வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பது உறுதி. இவர்களுடன் பார்னலும் மிரட்ட காத்திருக்கிறார்.

செஞ்சூரியன் மைதானத்தில் இந்திய, தென்னாபிரிக்க அணிகள் முதல் முறையாக மோதவுள்ளனர்.

**50 ஆவது சதம் நோக்கி சச்சின்:**

இந்திய வீரர் சச்சின் இதுவரை 174 டெஸ்ட் போட்டியில் விளையாடி 49 சதம் 59 அரைசதம் உட்பட மொத்தம் 14,366 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சிறப்பான போர்மில் இருந்த இவர் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 50. ஆவது சதத்தை எட்டுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 3 போட்டிகளில் மொத்தமே 126 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இம்முறை தென்னாபிரிக்காவில் 50 சதமடித்த முதல் வீரர் என்ற புதிய சாதனையை சச்சின் படைக்கலாம்.




**ராவிட் சாதனை:** முதல் தர போட்டிகளில் 200 கேட்ச் பிடித்து சாதித்துள்ள ராவிட் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 199 கேட்ச் பிடித்துள்ளார். தனது 148 ஆவது டெஸ்டில் பங்கேற்கும் ராவிட் 200 ஆவது கேட்ச் என்ற மைல் கல்லை எட்டுவார் எனத் தெரிகிறது.

கம்பீர் மேலும் 8 ஓட்டங்கள் எடுக்கும் பட்சத்தில் டெஸ்ட் அரங்கில் 3 ஆயிரம் ஓட்டங்களை எட்டலாம்.

**யாருக்கு அதிகம்:**

இரு அணிகளும் இதுவரை 24 டெஸ்டில் பங்கேற்றுள்ளன. இதில் இந்தியா 6 தென்னாபிரிக்கா 11 போட்டிகளில் வென்றுள்ளன. 7 போட்டி டிரா ஆனது.

கடைசியாக பங்கேற்ற 5 போட்டிகளில் இரு அணிகளும் தலா 2 இல் வெற்றி பெற்றது. ஒரு போட்டி டிராவில் முடிந்தது.

கடைசியாக நடந்த இரண்டு டெஸ்ட் தொடர்களும் 1-1,1-1 என்ற கணக்கில் டிரா ஆகியுள்ளது.

தென்னாபிரிக்க மண்ணில் இந்திய அணி அதிகபட்சமாக 414 ஓட்டங்கள் (கேப்டவுன் 2007) எடுத்தது. தென்னாபிரிக்க அணி 563 ஓட்டங்கள் (புளோம் பொன்டீன் 2001) எடுத்துள்ளது.

★ குறைந்த அளவாக இந்திய அணி டேர்பனில் (1996)66 ஓட்டங்களுக்கு தென்னாபிரிக்கா 84 ஓட்டங்களுக்கு, (ஜொகனஸ்பேர்க்) சுருண்டுள்ளது.

பந்து வீச்சில் தற்போதைய வீரர்களில் இந்தியாவின் ஹர்பஜன் சிங் 8 போட்டிகளில் 45 விக்கெட் வீழ்த்தியுள்ளார். தென்னாபிரிக்காவின் ஸ்டைன் 32(7 போட்டி) விக்கெட் கைப்பற்றியுள்ளார்.

**சச்சின் முதலிடம்:**

இரு அணிகளிடையிலான டெஸ்ட் போட்டிகளில் இந்திய வீரர் சச்சின் 22 போட்டிகளில் 1415 ஓட்டங்கள் (5 சதம், 5 அரைசதம்) எடுத்துள்ளார். அடுத்த இரண்டு இடங்களில் இந்தியாவின் சேவாக் 1162 ஓட்டங்கள் (12 போட்டி 5 சதம், 1 அரைசதம்), டிராவிட் 1132 ஓட்டங்கள் (18 போட்டி 2 சதம், 5 அரைசதம்) எடுத்துள்ளனர். தென்னாபிரிக்காவின் கலிஸ் (1087) நான்காவது இடத்தில் உள்ளார்.

**விதிப்படி தான் நடக்கும்:**

டெஸ்ட் அரங்கில் தனது 50 ஆவது சதம் குறித்து இந்திய வீரர் சச்சின் கூறுகையில்;

நான் எப்போதும் விதியை நம்புபவன். எனது 50 ஆவது சதம் எப்போது நிறைவேறுமென்று உள்ளதோ அப்போது அது நடக்கும். இது குறித்து அதிகமாக நினைத்துக்கொண்டு இருப்பதில்லை. தற்போதைக்கு போட்டிக்கு தயாராவது தான் எனது இலக்கு.

பொதுவாக ஜோகனஸ் பேர்க் மைதானம் உயரமான இடத்தில் இருப்பதால் போதுமான ஒக்சிஜன் கிடைப்பதற்கு சற்று சிரமமாக இருக்கும். இதனால் இங்கு கூடுதல் கவனத்துடன் விளையாடவேண்டும. இந்த சூழ்நிலைக்கேற்ப வீரர்கள் தங்களை மாற்றிக்கொள்வது தான் மிகவும் முக்கியம். இதற்காகவே முன்னதாக வந்து நீண்ட பயிற்சியில் ஈடுபட்டோம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெரிந்து கொள்ளுங்கள்

# சிறந்த கப்டன்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் சிறந்த கப்டனாகத் திகழ்ந்தவர் அலிஸ்டர் கெம்ப்பெல்.

இவர் 1972 ஆம் ஆண்டு செப்டெம்பர் 23 ஆம் திகதி சிம்பாப்வேயின் ஹராரே நகரில் பிறந்தார். வலதுகை சுழற்பந்து வீச்சாளர், இடதுகை துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்த கெம்ப்பெல், முதல்தர கிரிக்கெட் போட்டியில் விளையாடியபோது அடித்த சதமொன்ற தேர்வுக் குழுவினரை ஈர்த்தது.

அதன் காரணமாக 1992 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத்தில் ஆடும் வாய்ப்பு கெம்ப்பெலுக்கு (19 வயதில்) கிடைத்தது. இதில் சிறப்பாக விளையாடியதன் மூலம் அணியில் நிரந்தர இடத்தைப் பிடித்தார்.



பின்னர் 1993 ஆம் ஆண்டு சிம்பாப்வே அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. அந்தத் தொடரில் வசிம் அக்ரம், வக்கார் யூனுஸ் ஆகியோரின் பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டு 3 அரைச்சதங்களை விளாசினார்.

பின்னர் சிம்பாப்வேயின் அணியின் கப்டனானார். 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் கெம்ப்பெல் தலைமையில், சிம்பாப்வே அணி பங்கேற்றது. பின்னர் 1998 -99 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றியதோடு, 1999 உலகக் கிண்ணத்தில் இவரது தலைமையிலான அணி சுப்ப சிக்ஸ் சுற்றுவரை முன்னேறியேது.

2002 ஆம் ஆண்டு தனிப்பட்ட காரணங்களுக்காக கப்டன் பதவியிலிருந்து விலகினார். 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ண அணிக்கு இவர் தேர்வு செய்யப்படவில்லை. இதையடுத்து கெம்ப்பெல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார்.

60 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கெம்ப்பெல் 2,858 ஓட்டங்களைக் குவித்ததோடு. 21 போட்டிகளுக்கு கப்டனாகவும் இருந்துள்ளார். 188 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7 சதம் உட்பட 5,185 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 86 ஒருநாள் ஆட்டங்களுக்கு கப்டனாகவும் செயல்பட்டு சிம்பாப்வே கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த கப்டனாகத் திகழ்ந்தவர்.

2009 ஆம் ஆண்டு சிம்பாப்வே கிரிக்கெட்சபைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட பிறகு சிம்பாப்வே அணியின் பல்வேறு முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறந்த தொடக்க வீரர்

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் சிறந்த தொடக்க ஆட்டக்காரராக நீண்ட நாட்கள் இருந்தவர் முன்னாள் வீரர் நாதன் ஆஸ்லே.

இவர் 1971 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி நியூஸிலாந்தின் கிறைஸ்ட் சர்ச்சில் பிறந்தார். இளம் வயதிலேயே சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் மித வேகப்பந்து வீச்சாளராகவும் திகழ்ந்த ஆஸ்லே 1995 ஆம் ஆண்டு தேசிய அணியில் இடம்பிடித்தார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் முதன் முறையாகக் களமிறங்கினார். இதையடுத்து 1996 ஆம் ஆண்டு டெஸ்ட் அணியிலும் இடம்பிடித்தார்.

2002 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 153 பந்துகளில் இரட்டைச் சதமடித்தார். இதன் மூலம் டெஸ்ட் போட்டியில் குறைந்த பந்துகளில் இரட்டைச் சதமடித்தவர் என்ற சாதனையை படைத்தார்.




ஒருநாள்போட்டிகளில் அப்போதைய நியூஸிலாந்து கப்டன் ஸ்ரீபன் பிளமிங்குடன் இணைந்து பல்வேறு போட்டிகளில் சிறப்பாக தொடக்கத்தை ஏற்படுத்திக்கொடுத்தவர்.

சர்வதேச கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் குவித்த நியூஸிலாந்து வீரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்திலுள்ளார். 2007 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றார்.

81 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஆஸ்லே 11 சதங்கள் உட்பட 4,702 ஓட்டங்கள் குவித்துள்ளார். 51 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். 223 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 16 சதங்கள் உட்பட 7,090 ஓட்டங்கள் குவித்துள்ளார். 99 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு ஐ.சி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை சாம்பியன்ஸ் அணிக்கு விளையாடினார். 2009 ஆம் ஆண்டு கிறைஸ்ட்சர்ச்சில் பல்கலைக்கழக அணிக்கு தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடலில் கரைந்த கனவுகள்

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

## இருப்புக்கான போராட்டத்தில் எதிர்கொள்ளப்படும் சவால்கள்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றார் விபுலானந்த அடிகளார். ஆனால்,திரவியம் தேடுவதற்காக அன்றி தமது உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு நிம்மதியான வாழ்வைத் தேடி திரைகடல் ஓடுபவர்களே இன்று அதிகம்.

பெற்றதாயுடன் ஒப்பிடப்படும் பிறந்த பொன்நாட்டை விட்டு பல்லாயிரக் கணக்கானோர் அந்நிய தேசங்களை நாடுவதற்கான காரணங்கள் பலதாக இருந்தாலும் உள்நாட்டுப் போர்,பாதுகாப்பு ஸ்திரமின்மை, உயிர் அச்சுறுத்தல் மற்றும் வறுமை என்பன முக்கிய காரணங்களாகும்.

ஒரு மனிதனின் நினைவுகளில் பிரிக்க முடியாதவையாகக் கருதப்படும் பிறந்து வளர்ந்த மண்,கல்விகற்ற பாடசாலை,உயிருடன் கலந்த உறவுகள்,உற்ற நண்பர்கள் என்ற அனைத்து சந்தோசங்களையும் துறந்து இவற்றின் நினைவுகளை மட்டும் நெஞ்சங்களில் சுமந்து இருப்புக்கான போராட்டத்திற்காக அந்நிய தேசத்தில் வாழ்க்கையை கழிக்க துணியும் ஒரு மனிதனின் துயரம் வார்த்தைகளால் விபரிக்க முடியாதது.

இந்த துயரங்களுடன் ஆரம்பமாகும் இருப்புக்கான பயணத்தில் அந்நிய தேசத்தில் கால் பதிக்கும் வரை கடக்க வேண்டிய நெருப்பாறுகள் அங்கு சென்றடைந்த பின்னர் அகதி அந்தஸ்தை பெறும்வரையில் சந்திக்க வேண்டியது நெருக்கடிகள் என கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையைக் கடக்க வேண்டியது தவிர்க்க முடியாதது.

இவ்வாறு அகதி அந்தஸ்தைக் கோரி புறப்பட்டவர்களின் படகொன்று கடந்த புதன்கிழமை அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் பாறையொன்றுடன் மோதி மூழ்கியதில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

80 இற்கும் அதிகமானவர்கள் பயணித்ததாகக் கூறப்படும் இப் படகில் இருந்தவர்களில் 42 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இக் கட்டுரை எழுதப்படும் வரையில் 28 உடல்களே மீட்கப்பட்டுள்ள நிலையில் ஏனையவர்களைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

ஈராக்கியர் மற்றும் ஈரானியர்களைக் காவிவந்த இப் படகு அவுஸ்திரேலியாவின் குடியேற்ற வாசிகளைத் தடுத்து வைத்திருக்கும் கிறிஸ்மஸ் தீவை அடைய முயன்ற போதே பாறையொன்றுடன் மோதி சின்னாபின்னமாகச் சிதறியுள்ளது.

கடுமையான கடற்கொந்தளிப்புக்கு மத்தியில் பயணித்துக் கொண்டிருந்த இப் படகின் இயந்திரம் செயலிழந்ததைத் தொடர்ந்து கட்டுப்பாட்டை இழந்த படகு பாரிய அலைகளுக்குள் சிக்கித் தவித்தது.

ஏற்கனவே அலைகளின் தாக்கத்தால் உடையும் நிலைக்குத் தள்ளப்பட்ட இப் படகு பாறையொன்றுடன் மோதியதில் சின்னாப்பின்னமடைந்துள்ளது.

இதனால் அலையில் அகப்பட்ட துரும்பின் நிலையை அடைந்த படகில் இருந்தவர்கள் உதவி கேட்டு எழுப்பிய அவலக்குரல் அலையின் இரைச்சலையும் மீறி அப்பகுதியெங்கும் எதிரொலித்ததாகச் செய்திச் சேவைகள் தெரிவிக்கின்றன.

இதில் உயிரிழந்த ஆண்கள்,பெண்கள்,சிறுவர்கள்,குழந்தைகள் என பலதரப்பட்டவர்களினதும் உடல்கள் அப் பகுதியெங்கும் மிதந்தமை நம்ப முடியாததும் கண்ணால் பார்க்க முடியாததுமான பேரனர்த்தமென அவுஸ்திரேலிய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நிம்மதியான வாழ்வைத்தேடி அந்நிய தேசங்களை நாடுபவர்களின் கடல் கடப்பதற்கான தெரிவுகளாக கப்பலும் விமானமும் மட்டுமே உள்ளன.

இதில் விமான நிலையங்களில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் கடுமையான விதிமுறைகள்,கட்டுப்பாடுகள் மற்றும் பரிசோதனைகள் என்பவற்றால் இன்றைய காலத்தில் கப்பல் பயணத்தை தெரிவு செய்வோர் தொகை அதிகமாக உள்ளது.

உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளப்படும் இக் கப்பல் பயணத்தில் செலவு குறைவாக இருந்தாலும் கூட இதில் சந்திக்க வேண்டிய நெருக்கடிகள் ஏராளம்.

இதில் அவுஸ்திரேலியாவை நோக்கி மேற்கொள்ளப்படும் கப்பல் பயணங்களே அதிகம் ஏனெனில் இந்நாட்டின் முன்னைய அரசாங்கங்கள் குடிவரவுக் கொள்கையில் சிறிய தளர்வுப்போக்கைக் கடைப்பிடித்தமையும் குடிவாசிகளின் விவகாரத்தை தமக்குச் சொந்தமான கிறிஸ்மஸ்தீவில் அமைக்கப்பட்டிருக்கும் தடுப்பு முகாமில் வைத்து அவுஸ்திரேலியா கையாள்வதுமே காரணங்களாகும்.

படகுப் பயணமொன்றை மேற்கொண்டு கிறிஸ்மஸ் தீவில் அகதி அந்தஸ்தை எதிர் பார்த்து காத்திருக்கும் நபரொருவர் தனது பயண அனுபவம் குறித்து விபரிக்கையில் இதனை ஒரு பயங்கரமான கனவு எனக்கூறியுள்ளார்.

மேலும் கிறிஸ்மஸ் தீவை சென்றடைவதற்கு உதவும் ஆட்கடத்தல் முகவர்கவிடம் 15 ஆயிரம் டொலர்களை தான் செலுத்தியிருந்ததாகவும் இந்து சமுத்திரத்தைக் கடந்து செல்லும் குறுகிய பயணமே இதுவென அவர்கள் உறுதியளித்திருந்த போதும் கிறிஸ்மஸ் தீவை அடையவதற்கு 30 நாட்களை தாம் கடலில் கழித்ததாகவும் கூறுகிறார்.

அத்துடன் இப்படகுகளில் சிறந்த பாதுகாப்போ அல்லது போதிய வசதிகளோ இல்லாமையில் இந்த நீண்ட பயணத்தில் காய்ச்சல்,வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற வியாதிகள் ஏற்படும் பட்சத்தில் மருந்து வசதிகளின்றி படகிலேயே மரணிக்கும் நிலை ஏற்படுவதுடன் இவ்வாறு மரணிப்பவர்களை கடலில் தூக்கியெறிந்து விட்டு பயணத்தைத் தொடர்ந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

பயணத்தை ஆரம்பித்த சில நாட்களிலேயே படகிலிருந்த உணவும்,குடிநீரும் முடிந்துவிட ஏனைய நாட்களை பட்டினியோடு கழிக்க வேண்டிய நிலையும் இப்பயணத்தில் தவிர்க்கமுடியாதது.

இவ்வாறு பயங்கரங்கள் இப் பயணத்தில் இருக்கின்ற போதும் இப் பயணத்தை நாடுபவர்களின் தொகை மட்டும் குறைவடைவதாக இல்லை.

இவ்வருடம் படகுகள் மூலம் கிறிஸ்மஸ் தீவை அடைபவர்களின் தொகை வேகமாக அதிகரித்ததைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய அரசாங்கம் குடிவரவுக் கொள்கையில் இறுக்கத்தைக் கடைப்பிடித்தது.

கிறிஸ்மஸ் தீவில் 3 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களின் வழக்குகள் இன்னும் விசாரிக்கப்படாமல் இருப்பதைத் தொடர்ந்து குடிவரவைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர முயற்சிகளை அவுஸ்திரேலியா எடுத்திருந்தது.

இந்நிலையில் 28 பேரை பலிகொண்ட இச் சம்பவமானது அவுஸ்திரேலியாவின் குடிவரவுக் கொள்கைகள் மீதான இறுக்கத்தை சற்றும் தளர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

இச் சம்பவத்தால் பிரதமர் ஜூலியா கில்லர்ட் தலைமையிலான அரசாங்கம் கடும் விமர்சனங்களைச் சந்தித்துள்ளதால் அகதி அந்தஸ்து பரிசீலனை தொடர்பில் மென்போக்கை கடைப்பிடிப்பதற்கான சமிக்ஞைகளை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இது கிறிஸ்மஸ் தீவில் தஞ்சமடைந்துள்ளவர்களும் அவுஸ்திரேலியாவுக்கான பயணத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளவர்களுக்கும் ஒரு நற்செய்தியாக அமைந்துள்ளது.

ஆனால் எண்ணற்ற கனவுகளோடும் வண்ணமயமான எதிர்காலத்திட்டங்களுடனும் பயணத்தை ஆரம்பித்தவர்களின் கனவுகள் அனைத்தும் அலையில் அடித்துச் செல்லப்பட்ட கொடூரத்திற்கு எந்தச் செய்தியுமே பரிகாரமாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு [illegible] 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org